சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

71. கோபுர வாசல்

(வால்மீகியும் கம்பனும்)

ராமன் இலங்கையை முற்றுகை செய்து அங்கதனைத் தூதனுப்புவதற்கு முந்திய நிகழ்ச்சிகளை வால்மீகி நாற்பது சர்க்கங்களில் விவரித்திருக்கிறார். யுத்த காண்டத்தில் ஏறக்குறைய மூன்றிலொரு பங்கு இத்தகைய பிரவேசமாகவே அமைந்துவிடுகிறது.

கம்பராமாயணத்திலே இந்தப் பிரவேச நிகழ்ச்சிகள் காண்டத்தின் நான்கில் ஒரு பங்கிற்கும் குறைவாகவே இடம் பெற்றிருக்கின்றன.

சரணாகதிக்கு முன்

சீதையின் செய்திசொல்லிய அனுமனை ராமன் புகழ்ந்து தழுவிக் கொள்வதுடன் வால்மீகியின் யுத்தகாண்டம் தொடங்குகிறது. கம்பனது யுத்த காண்டமோ ராமன் கடல் காண்பதுடன் – அதாவது, வால்மீகியின் யுத்த காண்டத்தின் ஐந்தாம் ஸர்க்கத்திலிருந்தே – ஆரம்பமாகிறது. கடலைக் கண்ட ராமன் சீதையை நினைத்து வருந்துவதும் தம்பி லட்சுமணன் சமாதானப் படுத்துவதும் இந்த ஐந்தாம் சர்க்கத்தின் செய்தி.

முதல் நான்கு சர்க்கங்களின் செய்திகளும் கம்பனுடைய சுந்தர காண்டத்தின் இறுதிப்பகுதியில் மிகவும் சுருக்கமாகக் குறிப்பிடப்படுகின்றன என்று கருதலாம். ஆனால் ராமன் செய்தி சொன்ன அனுமனைப் புகழ்ந்ததாகவோ, தழுவிக் கொண்டதாகவோ கம்பன் சொல்லவில்லை.

நன்றி தெரிவிக்கவும் ராமன் மறந்து விடுகிறான். சீதையின் சூடாமணியைக் கண்ட மகிழ்ச்சி வெறியில இந்த மறதி ஏற்பட்டு விடுகிறது என்பது கம்ப சித்திரத்தின் உட்பொருள்.

முதலாவது படலமாகிய 'கடல் காண் படல'த்தைப் பதினொரு பாடல்களில் சுருக்கமாக அமைத்துக் கொண்டு கம்பன் ராவணனது மந்திராலோசனையை இரண்டாவது படலத்தில் விவரமாய்ச் சொல்லுகிறான். இந்த மந்திராலோசனை வால்மீகத்திலே ஆறாம் சர்க்கத்திலிருந்து பத்துச் சர்க்கங்களை நிரப்பி விடுகிறது.

பிறகு விபீஷணன் ராவணனைப் பிரிந்து செல்வதும், விபீஷண சரணாகதியும், பாசறையில் பட்டாபிஷேகமும் நான்கு சர்க்கங்களில் சொல்லப்படுகின்றன. இவையெல்லாம் கம்ப ராமாயணத்தில் 'விபீடணன் அடைக்கலப்படலம்' என்ற ஒரே படலமாக அமைந்துள்ளன.

ஆனால் வால்மீகத்தில் இல்லாத—எந்த ராமாயணத்திலும் சொல்லப்படாத—இரணியன் கதை ஒரு தனிப்படலமாக, விபீஷணன் வாக்காக, விபீஷண சரணாகதி கூறும் படலத்திற்கு முன்பே காணப்படுகிறது. இரணியனை ராவணனுக்கு எச்சரிக்கையாகவும், பிரகலாதனை விபீஷணனுடைய லட்சியமாகவும் காட்டுகிற இந்தப் படலம், விபீஷண குண சித்திரம் என்ற மாளிகைக்கு ஓர் அதிசயத் திறவு கோலாக அமைக்கப் பெற்றிருக்கிறது.

கல்லுக்குள்ளே சிலை

விபீஷண சரணாகதிக்குப் பின் வரும் முக்கிய நிகழ்ச்சி சேது பந்தனம். சேது பந்தனத்திற்குப் பின்பே இலங்கையின் வடக்குப் புறத்தில் ராமன் அமைத்துக் கொண்ட பாசறையில் ராவணனுடைய ஒற்றர்களான சுக சாரணர்களைச் சந்திக்கிறோம், கம்ப ராமாயணத்திலே. வால்மீகத்திலோ சேது பந்தனத்திற்கு

முன்பே கடற்கரையிலேயே சார்த்தூலன் என்ற ஒற்றனையும் சுகனையும் முதன் முதல் சந்தித்து விடுகிறோம்.

ராமனுல் விடுவிக்கப்பட்ட சுகனை வால்மீகத்தில் மீண்டும் சந்திக்கிறோம். சுகன் சாரணனுடன் சேர்ந்து வந்து வேவு பார்ப்பது ராமன் கடல் கடந்து வந்த பின்புதான் நிகழ்கின்றது.

அடுத்த முக்கிய நிகழ்ச்சிகள் ராமலட்சுமணர் இலங்கை காண்பதும், ராவணன் வானர சேனை காண்பதும்தான். சாரணன் வானர சேனையைக் காட்டுவதும், சுகன் வானரத் தலைவரை ராவணனுக்குத் தெரிவிப்பதும், சார்த்தூலன் ராம சேனையை ராவணனுக்கு அறிவிப்பதும் ஆகிய நிகழ்ச்சிகள் ஐந்து சர்க்கங்களில் விவரிக்கப்படுகின்றன வால்மீகத்திலே.

இந்த நிகழ்ச்சிகளிலிருந்து கம்பன் உருவாக்கியிருக்கும் 'இராவணன் வானரத் தானை காண் படல'மே கம்பனது கவிச் சிற்பத் திறனுக்கு ஒரு தக்க சான்றாகும்.

கல்லிலிருந்து ஒரு சிலையை உருவாக்கும் சிற்பி வேண்டாத பகுதிகளைச் செதுக்கித் தள்ளி விடுவதுபோல் கம்பனும் தாட்சணியம் இல்லாமல் தன் கட்டத்திற்கு இசையாத நிகழ்ச்சிகளை வெட்டித் தள்ளி விடுகிறான்.

இராவணன் வானரத் தானை காண்பதிலிருந்தே உருவாகின்றது சுக்கிரீவ தசக்கிரீவர்களின் குத்துச் சண்டை. இந்தச் சண்டையும், இதன் விளைவாகிய மகுடபங்கமும், அடுத்த படலமாகிய 'மகுடபங்கப் படல'மாக அமைந்து, யுத்த காண்டப் பிரவேசத்திற்கு ஒரு வசீகர சோபை தருகின்றன. இப்படலத்தை அடுத்து வரும் நிகழ்ச்சி அணிவகுப்பேயாகும்.

ஆனுல் வால்மீகத்திலே வானர சேனையை ராவணன் கண்ட பின்பு, சுக்கிரீவ தசக்கிரீவர்களின் தொந்த யுத்தத்திற்கு முன்பே ஒன்பது சர்க்கங்கள் குறுக்கிடுகின்றன. இந்தச் சர்க்கங்களிலே ராவணன் சீதையைப் பார்க்கிறான்.

வித்யுஜ்ஜிஹ்வன் என்ற அரக்கனைக் கொண்டு ராமனுடைய மாயா சிரசைச் சீதாதேவிக்குக் காட்டுகிறான். சீதை புலம்புகிருள்.

ராவணன் படை திரட்டுகிறான். விபீஷணனுடைய மனைவி சீதையைத் தேற்றுகிருள். வானர சேனை பேரிகை கொட்டிச் சங்கு ஊதி ராவணனது ஏவலாளர்களைப் பயமுறுத்துகின்றது.

இப்படி எத்தனை நிகழ்ச்சிகள் குறுக்கிட்டு, ராவணன் வானர சேனையைப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே சுக்கிரீவன் கிளம்பிப் போய் முடிமணி கவர்ந்த அந்தப் பெரு நிகழ்ச்சியின் வேகத்தையும் பெருமையையும் பெருமிதத்தையும் தடை செய்கின்றன.

காவிய நாயகனுடைய தலையைப்போல் ஒன்றை ஓர் அரக்கன் மாயையால் உருவாக்கக்கூடும் என்பதே கம்பனுடைய காவிய கதிக்கும் கம்ப சித்திர அமைப்பிற்கும் புறம்பானது. சீதையின் பிரலாபம், விபீஷணனது மனைவியின் பிரஸ்தாபம் முதலியன குறுக்கிடாமலே கம்பன் யுத்தப் பிரவேசம் செய்து விடுகிறான். கும்பகர்ணனுடைய வதத்திற்குப் பின்பே சீதையின் நிலை, சீதையின் சோதனை முதலியன பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

வால்மீகத்திலே ராவணனுடைய அணிவகுப்பும், சுக்கிரீவ ராவணர்களின் தொந்த யுத்தத்திற்கு முன்பே நிகழ்கிறது. ராமன் இலங்கையில் போர் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்த வண்ணமே இலங்கையைப் பார்க்கச் சுவேல மலையில் ஏறுகிறான்.

ராமன் கட்சியினர் மந்திராலோசனை செய்யவேண்டும் என்கிறார்கள். விபீஷணனே 'என்னுடைய மந்திரிமார் பறவையுருவங்கொண்டு பகைவரின் ஏற்பாடுகளைப் பார்த்துவிட்டு இப்போதுதான் திரும்பி வந்திருக்கிறார்கள்' என்று சொல்லிவிட்டு அந்த ஏற்பாடுகளையும் தெரிவிக்கிறான். பிறகு தாங்கள் செய்ய வேண்டியதைக் குறித்தும் ராமனிடம் தெரிவிக்கிறான். இதை அனுசரித்துக் கட்டளையிட்ட பின்பே ராமன் சுவேல மலையில் ஏறி இலங்கையைக் காண்கிறான்.

இப்போது கோபுர நிலையிலே ராவணன் காணப்படுகிறான். அரக்க மன்னனைக் கண்டதும் சுக்கிரீவன் வெகு கோபங் கொண்டவனுய், ராமனும் மற்ற வானர வீரர்களும் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே தன் உடல் வலிமையாலும், மன வலிமையாலும் ஆகாயத்தில் திடீரென்று கிளம்பிக் கோபுரத்தலத்தை நோக்கிப் பாய்ந்தான் என்பர் வால்மீகி.

இருவர் கண்ட தொந்த யுத்தம்

தொந்த யுத்தம் வால்மீகத்திலும் ரஸமாகவே வருணிக்கப் படுகிறது. ஆனுல் கம்பனுடைய சுக்கிரீவ சித்திரம் வேறு; வால்மீகியின் சுக்கிரீவ சித்திரம் வேறு.

கோபுரத் தலத்தை யடைந்த சுக்கிரீவன் அங்கே கொஞ்ச நேரம் நின்று, கொஞ்சமும் அச்சமின்றி ராவணனை ஒரு துரும்பாகக் கருதி உற்று நோக்குகிறான். சில சொற்களையும் சொல்லுகிறான் என்பர் வால்மீகி.

'அரக்கா! நான் உலகத் தலைவனான ராமனுடைய நண்பனும் அடிமையுமாவேன். இனி நான் உன்னை உயிருடன் விட்டு வைக்கமாட்டேன்' என்பது சுக்கிரீவன் வார்த்தை. 'எப்படிக் குத்தி எப்படிப் பாய்கிறது இந்த வார்த்தை!' என்று நாம் அதிசயிக்கத்தான் செய்கிறோம்.

ஆனால் கம்பனுடைய சுக்கிரீவனுக்கோ இப்படிச் சுருக்கமாகக் கொடுஞ் சொல் சொல்லவும் அவகாசம் இல்லை. ராவணனைக் கண்ணுற்றான்; எதிர் சென்று நின்றான். இவன் பேசவில்லை; அவனைத்தான் பேசவைக்கிறான்.

'வந்த காரியமென்ன!' என்று ராவணன் கேட்டும் சுக்கிரீவன் பதில் ஒன்றும் சொல்லவில்லை, என்பதல்லவா கம்பசித்திரம்?

வாயால் பதில் சொல்லவில்லை; கையால் பதில் சொல்லுகிறான் ஒரு குத்து விட்டு! அவன் உடல் பதைக்கக் குத்துகிறான்; தன் இரண்டு கைகளும் அழுந்தக் குத்துகிறான். இது கம்பன் காணும் குத்துச் சண்டையின் தொடக்கம்.

வால்மீகத்திலும் சுக்கிரீவனுடைய செயல்-திறமைக்குப் பஞ்சம் இல்லை. 'உன்னை உயிருடன் விடேன்' என்று சொல்லிக் கொண்டே சுக்கிரீவன் ராவணன் தலைமேல் வந்து இறங்கி அவனுடைய கிரீடத்தைத் தள்ளித் தானும் பூமியில் குதித்தான் என்று வால்மீகி எடுத்த எடுப்பிலேயே சுக்கிரீவன் ராவணனை மகுட பங்கம் செய்துவிட்டான் என்பர். கம்பனிலே இந்த மகுட பங்கம் இவ்வளவு விரைவாக நடைபெறவில்லை.



ஒரு நீண்ட குத்துச் சண்டையின் இறுதிக் காட்சிதான் ராவண மகுட பங்கம். அப்படி யில்லாவிட்டால் ராவண வீரத்திற்குப் பங்கம் வந்து விடுமோ என்று கவியுள்ளம் அஞ்சுவது போலக் காண்கிறது.

பல பாடல்களில் குத்துச் சண்டை விவரமாக வருணிக்கப்படுகிறது. மார்பில் குத்திய சுக்கிரீவனை ராவணன் இருபது கைகளாலும் அடிக்கிறான். அடித்தவனைச் சுக்கிரீவன் உதைக்கிறான். உதைத்தவனை ராவணன் தலையில் போட்டுத் துவைக்கிறான். இவன் அவனை அமுக்குகிறான்; அவன் இவனைக் கிறுகிறு வென்று சுழற்றுகிறான். இருவரும் அகழியில் விழுந்து மல்ல யுத்தம் செய்கிறார்கள்; மறுபடியும் கோபுரத்தில் ஏறிப் போர்த் திறமை காட்டுகிறார்கள், வெற்றி தோல்வி இல்லாமலே.

இந்த நிலையிலும் மகுடபங்கம் நிகழ்ந்ததாகக் கம்பன் கூறவில்லை. மேலும் இந்தச் சண்டைக்கு அவகாசம் கொடுக்க விரும்பிக் கவிஞன், சுக்கிரீவனை வரக் காணாது ராமன் வருந்திக் கொண்டிருப்பதை ஆறு பாடல்களில் வருணிக்கிறான்.

ராமனுடைய துயரம் நீண்டு செல்லுகிறது. போரும் நீண்டு நடந்த வண்ணமாகவே யிருக்கிறது. அந்த நிலையில் திடீரென்று சுக்கிரீவன் மகுட மணிகளைப் பறித்துக் கொண்டு விரைந்து கிளம்பி விடுகிறான்.

வென்றிலர் தோற்றி
லாராய் வெஞ்சமம்
விளைக்கும் வேலை,

ராவணன் கொஞ்சமும் எதிர் பாராத நிலையில் இந்த மகுட பங்கம் நிகழ்ந்ததாகக் கம்பன் கூறுவது கவனிக்கத் தக்கது.

திரும்பி வந்த சுக்கிரீவனைத் தழுவிக் கொண்டு ராமன் வருந்தியதாகவும், சுக்கிரீவனுடைய செயலைக் கண்டித்ததாகவும் வால்மீகியும் சொல்லி யிருக்கிறார்.

நட்பா, ராஜதந்திரமா?

ஆனால், இங்கே நட்புக் காதலின் ஆழத்திலிருந்து வருகிற வார்த்தை இது என்று சொல்வதைக் காட்டிலும், ராஜதந்திரத்தைத் தழுவி வருகின்ற வார்த்தையென்றே கருதக் கூடும். 'இவ்வாறு சாகசமான காரியத்தை அரசர்கள் செய்யவே கூடாது' என்கிறான் ராமன்.

சுக்கிரீவனுடைய விடை சாதாரணமாக அந்த நிலையில் எந்த வீரனும் சொல்லக் கூடிய சமாதானம்தான். 'ராகவனே! உன் மனைவியைக் கவர்ந்து சென்ற ராவணனைக் கண்ட பின்பும் என் உடல் வலிமையை நான் அறிந்திருக்கையில் எப்படிப் பொறுத்திருப்பேன்!' என்பதுதான் சுக்கிரீவன் மறுமொழி.

அதை குறித்து ராமன் மிக்க மகிழ்ச்சியடைந்து லட்சுமணனை நோக்கிச் சேனைகளைச் சித்தப்படுத்தச் சொல்லுகிறான் என்பர் வால்மீகி. ராமனுடைய இந்த மகிழ்ச்சியும் சாதாரண வீரனுடைய மகிழ்ச்சிதான், இராஜதந்திரியின் மகிழ்ச்சி தான்.

ராவணனைச் சுக்கிரீவன் மகுட பங்கம் செய்தானென்று கூறும் வால்மீகி, அந்த முடிமணிகளை இவன் பறித்துக் கொண்டு வந்ததாகச் சொல்லவே யில்லை. சொல்லின் முடிமணிகளாகச் சுக்கிரீவனிடமிருந்து,

காட்டிலே கழுகின்
வேந்தன் செய்தது
காட்ட மாட்டேன்;

நாட்டிலே குகனார்
செய்த நன்மையை
நயக்க மாட்டேன்!

என்றெல்லாம் புறப்பட்ட மறுமொழியைத்தான் வால்மீகத்தில் காண்போமா!

இப்படிச் சுக்கிரீவன் சொல்லி, முடிமணிகளைப் பறித்து வந்த அந்தக் கைகளை 'வெறுங்கை'யாகவே பாவித்து,

வெறுங்கை வந்தேன்

என்று கூறுவது சுக்கிரீவ குண சித்திரத்தை எப்படி திறம் பெறச் செய்து விடுகிறது!

வால்மீகத்திலிருந்து தான் செய்து கொண்ட இந்த வேறுபாட்டை வலியுறுத்திச் சுக்கிரீவ குண சித்திரத்தை மேலும் சோபிக்கச் செய்வதற்காகக் கம்பன், மகுடமணிகளைப் பறித்த அந்த அருமையை விபீஷணனே கொண்டாடுவதாகக் காட்டி யுள்ளான்.

இத்தகைய பிரவேசத்தை யுத்த காண்டத்திற்கு ஓர் அணியாக, ஒரு வசீகர அணியாக அமைத்துக் கொண்டு கம்பன் அணி வகுப்பைக் காட்டப்போகிறான்.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

72. தரிசனம் கிடைக்கிறது

'பொலிந்தது போர்' என்று தன் மனோபாவத்தை உயர்த்திப் பார்த்த ராவணனது மாட்சியைக் கம்பன் வருணித்திருக்கிறானே ஒரு கட்டமாக, அந்த மாட்சிக்கு மீண்டும் ஒரு மூக்கறுப்பு நேர்ந்து விட்டது சுக்கிரீவன் செய்த மகுடபங்கத்திலே.

எந்தக் கோபுரத்தில் ஏறி ஆணவம் ராட்சஸப் படமெடுத்துத் தன் துஷ்ட 'நாக'க்கண்களால் வானர சேனையை அலட்சியமாக நோக்கிக் கொண்டிருந்ததோ அதே கோபுரத்திலேயே மானக்கேடு நேர்ந்து விட்டது.

கருடனைக் கண்டு படம் சாய்ந்த பாம்பு ஒரு குப்பை மேட்டிலிருந்து இறங்குவதுபோல், முடிமணிகளைப் பறிகொடுத்த ராவணன் வடதிசைக் கோபுரத்தினின்றும் கீழே இறங்கிப் போனான் :

பொன்றுது பொன்றி
னன்தன் புகழென
இழிந்து போனான்.

[பொன்றுது பொன்றினன் – உயிர் போகாமலே செத்தவன் போலாகி விட்டவன்.]

ராவணனுடைய இந்த நிலையோடு ராமனது அந்த மகிழ்ச்சி நிலையை முரண்பட வைத்துக் காட்டுகிறான் கவிஞன் :

பொங்கிய தோளி
னுனும் இழிந்துபோய்
இருக்கை புக்கான்.

[இருக்கை புக்கான் – இருப்பிடம் போய்ச் சேர்ந்தான்.]

சுக்கிரீவன் கொணர்ந்த வெற்றியை ராமனைப் போல் நாமும் உள்ளத்திலே நிறையத் தேக்கிக் கொண்டு, ஆணவம் சுருங்கி 'நாணம் நீள' இறங்கிப் போய் விட்ட ராவணன் இனி என்ன செய்யப் போகிறான் என்பதையும், ராமன் என்ன செய்யப் போகிறான் என்பதையும் கவனிப்போம்.

இந்தச் செய்திகளைக் கம்பன் 'அணி வகுப்புப் படலம்' என்ற ஒரு படலத்தில் இருபத்தெட்டுப் பாடல்களில் கூறியுள்ளான். இந்தப் படலத்தில் பிரவேசிப்பதற்கு முன் வால்மீகி கூறியுள்ள சரித்திரப் போக்கையும், அணிவகுப்பைக் குறித்து அவர் கூறுவதையும் தெளிவான ஒரு சித்திரமாக நம் உள்ளத்தில் பதிய வைத்துக் கொள்ளவேண்டும். அப்போது தான் ஆதி காவியத்தினின்றும் கம்பன் செய்திருக்கும் முக்கிய வேறுபாடுகளை நாம் நன்கறிந்து கொள்ள முடியும்.

'மகுடபங்கம்'—இருவர் போக்கு

சுக்கிரீவன் ராவணனை மகுடபங்கம் செய்த படலமே ஸாராம்சத்தில் கம்பனுடைய ஒரு தனிப் பெரும் படைப்பாகும். 'எப்படி?' என்று கொஞ்சம் பார்க்கலாம்.

வால்மீகத்திலே மகுடபங்கம் செய்யுமாறு சுக்கிரீவனை ஆத்திரப்படுத்தக் கூடிய ஒரு காரணம் காட்டப்பட்டிருக்கிறது. ராவணன் ஆணைப்படி ஒற்றனை சுகன் கிளி யுருவத்துடன் வந்து சுக்கிரீவனை ராமனிடமிருந்து வேறுபடுத்த முயல்வதுதான் அந்தக் காரணம்.

'நம்மைப் பேதப்படுத்தத் துணிந்தானே பாவி! அவனுக்குத் தக்க பாடம் கற்பிப்போம். இந்தக் கிளியின் சிறகைப் பறித்தது போதாது' என்று கருதியிருக்கவேண்டும். இப்படி மகுடபங்கத்திற்கு ஆணிவேராக ஒரு காரணம் காட்டியிருப்பது வால்மீகியின் கலைத்திறன்.

இந்தக் காரணத்தைக் . காட்டாமல் விட்டு விட்டதே கம்பனது கலைத் திறன் என்பதைத் தெரிந்து கொண்டால், இரு பெருங் கவிஞர்களுடைய கவிச் சித்திரப் போக்கையும் ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். ஆத்திரம் மூட்டக் கூடிய விசேஷ காரணம் இல்லாமலே சுக்கிரீவன் பாய்ந்துபோய் மகுடபங்கம் செய்து மகுட மணிகளையும் பறித்துக்கொண்டு திரும்புவது, கம்ப சித்திரத்திலே ராம சுக்கிரீவர்களுடைய நட்புக் காதலின் வளர்ச்சி காட்டும் நிகழ்ச்சிதான்.

மகுட மணிகளோடு வந்து சேர்ந்து 'வெறும் கை வந்தேன்!' என்று தானே சொன்னான்! வால்மீகத்திலோ உள்ளபடியே வெறும் கையோடு வந்தவன் தானே சுக்கிரீவன்.

சுக்கிரீவனது செய்கையை ராமன் உடன்படாது பேசியதும் அதற்குச் சமாதானமாகச் சுக்கிரீவன், 'வீரனே, உன் மனைவியைக் கவர்ந்து சென்ற ராவணனைக் கண்ட பிறகு என் உடல் வலிமையை நான் அறிந்திருக்கையில் எவ்வாறு பொறுத்து நிற்பேன்!' என்று சொன்னான். கம்ப சித்திரத்திலோ சுக்கிரீவன் சமாதானமாகவே மறுமொழி கூறவில்லை. ஆறாத புண்ணோடு கூடிய தன் இதயத்தையே திறந்து காட்டுகிறான், தன் பேச்சின் வாயிலாக.

நாடகத் திறனுக்குச் சான்றுகள்

இலங்கையின் வளத்தை யெல்லாம் லட்சுமணனுக்குக் காட்டியதும் ராமன் தன் சேனையை ஒழுங்கு படுத்தக் கருதியதாக வால்மீகி கூறுவர். அப்படி ஒழுங்கு படுத்திக் கருட வியூகமாக வானர சேனையை அணி வகுத்து நிறுத்தும் போது, தானும் தம்பியும் சேனையின் தலைப்புறத்தில் இருக்க வேண்டுமென்பது ராமன் திட்டம்.

இந்தத் திட்டத்திலே சுக்கிரீவன் தன் பரிவாரங்களோடு பின் புறத்தே இருக்க வேண்டும். அங்கதன் நீலனுடன் சேனையின் நடுப்புறத்தே யிருக்க வேண்டும். இப்படி அணி வகுத்த விவரம் கம்பனில் காணப்பட வில்லை.

கம்பன் தன் 'அணிவகுப்புப் படல'த்திலே, வானர சேனைகள் இலங்கை மதிலைத் தழுவி ஆரவாரிக்கும் போது சுக்கிரீவனும் லட்சுமணனும் முன் செல்ல ராமனும் செல்வதாகத் தெரிவிக்கிறான்.

ராமன் இலங்கையை லட்சுமணனுக்குக் காட்டிச் சேனையின் அணி வகுப்பைப் பற்றிக் கூறிய பின்பே சுகன் என்ற சாரணனைச் சுக்கிரீவன் ராமனது கட்டளைக்கிணங்க விடுதலை செய்ததாக வால்மீகி கூறுகிறார். சுகன் ராவணனிடம் போய் வானரர்களின் வல்லமையைப் பாராட்டுகிறான்.

இப்படிப் பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்த பின்பே சுக்கிரீவன் கோபுரத்தின் மீது பாய்ந்து ராவணனை மகுட பங்கம் செய்கிறான். கம்ப ராமாயணத்திலோ மகுட பங்கத்திற்குப் பின்பே அணி வகுப்பு நிகழ்வதைக் காண்கிறோம்.

சுகன் வந்து வானரர்களின் வல்லமையைப் பாராட்டி. 'அந்தப் பெருஞ்சேனைகள் ஆயிரக் கணக்காக மலைகள் போலவும் மேகங்கள் போலவும் விளங்கி இந்த நிலத்தை மூடிக் கொண்டு நிற்கின்றன.... அந்த வானரர்கள் நமது நகரத்தின் மதில்களை வந்தடையு முன்னமே நீ சீதையை விட்டு விடவேண்டும், அல்லது போர் தொடுக்க வேண்டும்' என்று ராவணனிடம் தெளிவாகச் சொன்ன பின்பும், ராவணன் சுகசாரணர்களை வேவு பார்த்து வருமாறு அனுப்பியதாக வால்மீகி கூறுவர்.

ஏற்கெனவே, கிளியுருவில் வந்து போன சுகன் மறுபடியும் வானர உருவில் இதே உருவம் தரித்துக்கொண்ட சாரணனுடன் வருகிறான். இச் சமயம் தான் விபீஷணன் கண்டு பிடித்ததாக ஆதிகாவியம் தெரிவிக்கிறது.

சுகசாரணர்கள் மறுபடியும் எதிரிகளின் பராக்கிரமத்தைப் பாராட்டிச் சீதையை விட்டு விடுவதே தகுதி என்று சொன்ன பின்பு, ராவணன் உயர்ந்த உபரிகையின் மேலேறி வானர சேனையைப் பார்க்கிறான். உள்ளுக் குள்ளே அச்சம் கொண்ட ராவணன், மாற்றாரைப் புகழ்ந்த சாரணர்களைக் கண்டித்து விட்டு, சார்த்தூலன் முதலிய வேறு ஒற்றர்களை வரவழைத்து மறுபடியும் உளவுகளை யெல்லாம் அறிந்து வருமாறு கட்டளை யிடுகிறான். இந்த ஒற்றர்களும் வேற்றுருக் கொண்டு வேவு பார்க்கிறார்கள்.

இவர்களையும் விபீஷணன்தான் கண்டு பிடிக்கிறான். இரக்கங் கொண்டு சார்த்தூலனை விடுவிப்பவனும் ராமன்தான். சார்த்தூலனும் வானர பராக்கிரமம் பேசுகிறான்; சீதையை விட்டு விட வேண்டும் அல்லது போர் புரிய வேண்டும் என்று தான் முடிவாகச் சொல்லுகிறான்.

இப்படித் திரும்பத் திரும்ப வந்து கொண்டிருக்கும் ஒற்றர்களைப் பற்றிய குழப்பச் செய்திகளை ஒழுங்குபடுத்தி

'ஒற்றுக் கேள்விப் படலம்' என்ற ஓரே படலத்தை அமைத்திருப்பதே கம்பனுடைய கலைத் திறனுக்கு ஒரு நல்ல சான்றாகும். பொதுவாகக் கலைத் திறனுக்கு மட்டுமா !—நாடகத் திறனுக்கும் இது ஒரு நல்ல சான்றுதான்.

கருடவியூகமாய் அணி வகுத்த சேனையுடன் ராமன் இலங்கை நோக்கி வருவதையும் சார்த்தூலன் ராவணனிடம் தெரிவித்து விட்டான் .என்பர் வால்மீகி. 'இன்னார், இனையர்' என்று வானரர்களைச் சார்த்தூலன் அறிவித்ததும் ஆலோசனையுடனிருந்த ராவணன் உள்ளத்தில் சிறிது அச்சமும் கொண்டு மந்திரிமார்களோடு ஆலோசனை செய்வதாகவும், அதற்குப் பின்பே சீதைக்கு ராமனுடைய மாயத் தலையுடன் நாணேற்றின வில்லைக் காட்டுவதாகவும் வால்மீகி கூறுகிறார்.


வானரர்களின் சிங்கநாதம் சீதையின் செவியில் விழுந்து அவள் உள்ளத்தைத் தேற்றித் தெளிவிக்கிறது; ராவணன் செவியில் விழுந்து அவனது பிடிவாதத்தைத் தான் தூண்டிவிடுகிறது மந்திரிகள் உற்சாகமற்றிருக்கிறார்கள்.

மாலியவான் வெகுவாகப் புத்திமதி சொல்லிச் சீதையை விட்டு விடுவதே தகுதியென்பதை வற்புறுத்துகிறான். ராவணன் இணங்காமலே பிடிவாதமாகப் போருக்குத் துணிந்து இலங்கையில் காவல் அமைத்துச் சேனையை வகுத்து வைக்கிறான்.

இது வால்மீகியின் கதைப் போக்கு. இதிலிருந்து கம்பன் செய்திருக்கும் மாறுபாடுகளெல்லாம் நாடகத் திறனுக்குச் சான்றுகளே.

ஆதி காவியத்திலே அணிவகுப்பு

இலங்கையை நன்றாகப் பாதுகாக்கும் ஏற்பாடாக, ராவணன் பிரஹஸ்தன் என்பவனைக் கிழக்கு வாசற்காவலில் நியமிக்கிறான். தெற்கு வாசலில் மகோதரன் முதலானவர்களைக் காத்திருக்குமாறு கட்டளையிடுகிறான். பிறகு மேலை வாசற்காவலை இந்திரஜித்தன் வசமாக்குகிறான். எதிரிகளை எதிர்த்துத் தடுக்கவேண்டிய வடக்கு வாசலில் சுகசாரணர்களை ஏவி நிறுத்தி வைக்கிறான்.



ஏன் அப்படி? உளவு பார்த்து வந்தவர்களல்லவா! 'அவர்களோடு நானும் இங்கே இருப்பேன்' என்று மந்திரிகளை நோக்கிச் சொல்லுகிறான். ராவணன் விபீஷணன் செய்த ஏற்பாடுகளைத் தெரிவித்த பின்பு, ராமனும் ஏற்பாடுகளைச் செய்தான் என்பர் வாமீகி.

இலங்கையின் கிழை வாசலில் பிரஹஸ்தனை எதிர்த்துப் போர்புரிய நீலன் என்கிற வானர சேனாதிபதி நியமிக்கப்படுகிறான். அங்கதன் தெற்கு வாசலில் மகோதரன் முதலானவர்களை எதிர்த்து நிற்குமாறு ஏவப்படுகிறான். மேலை வாயிலைத் தாக்கிப் பல வானரர்களுடன் நுழைய வேண்டு மென்பது அனுமனுக்கு இடப்படும் கட்டளை.

ராவணனே வந்து நிற்கப் போகும் வடக்கு வாசலைத் தானும் லட்சுமணனுமாகத் தாக்கப் போவதாய் ராமன் அறிவிக்கிறான். சுக்கிரீவன், விபீஷணன் முதலானவர்கள் ராவணனுடனும் மேலை வாசலிலுள்ள இந்திரஜித்துடனும் போர் புரிகின்ற வானர சேனைகளுக்கு இடையில் மத்திம சேனையாக இருக்க வேண்டும் என்பது இப்போது இங்கே ராமனுடைய திட்டமாகும்.

இந்த ஏற்பாடுகளைச் செய்த பின்பே ராமன் சுவேல மலையில் ஏறி இலங்கையைப் பார்ப்பதாகவும், ராவணனைக் காண்பதாகவும், அப்போது சுக்கிரீவன் ராவணன் மேல் பாய்ந்து மகுடபங்கம் செய்வதாகவும் வால்மீகி கூறியுள்ளார்.

அப்பால் ராமன் அணி வகுப்புடனே புறப்பட்டு இலங்கையை முற்றுகை செய்து அங்கதனைத் தூதனுப்பும் செய்தி வருகிறது.

* * *

இப்படி வால்மீகத்தில் வரும் யுத்த காண்ட முற்பகுதியுடன் கம்பனுடைய யுத்தகாண்ட முற்பகுதியை ஒப்பிட்டுப் பார்ப்பது நலமாம். இப்படிச் செய்வதால், வால்மீகி ஒரு காவியப் பூங்காவனம் வளர்க்கிறார் என்பதையும், கம்பனே ஒரு காவியப் பூங்கோயிலை வீச்சும் சிற்றுளித் திறனும் ஒருங்கே அமையுமாறு கட்டி நிறுத்துகிறான் என்பதையும் நன்குணர்ந்து கொள்ளலாம்.

வால்மீகியின் தபோ வனத்திலிருந்து உருவாக்கப் பெற்ற இந்தக் காவியப் பூங்காவனம் சோலைமேல் சோலையாகச் செழித்து வளர்கிறது. யுத்தகாண்டத்தை அடைவதற்கு முன்பே, சுந்தரகாண்டம் என்ற அந்தச் சோலையின் தொடர்ச்சி தான் யுத்த காண்டம்.

இக் காண்டத்தின் முதல் சர்க்கத்திலிருந்து சர்க்கம் சர்க்கமாக நாம் மேலே மேலே சென்று கொண்டிருக்கும்போது, காடும் பள்ளத்தாக்குமாகவுள்ள பிரதேசங்களில் ஏறியும் இறங்கியும், சுற்றிச் சுற்றிப் போய் வழி பிடித்தும் செல்வது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது.

அங்கும் இங்கும் அழகிய செடிகளையும் பூமரங்களையும் பொய்கைகளையும் காணும்போது 'நீண்ட வழி நடந்தோம்' என்ற களைப்பும் மறந்து போகிறது.

சில இடங்களில் 'இது சோலையா, காடா, வனமா!' என்ற ஐயப்பாடும் ஏற்படுகிறது. 'இந்தப் பக்கத்தில் செடி கொடிகளே இல்லையோ!' என்றும் தோன்றுகிறது. 'புல்லாந்தரை கூடத் தென்படாமல் முள்ளுச் செடிகளுக்கிடையேதான் போய்க் கொண்டிருக்கிறோமோ!' என்ற உணர்ச்சியும் ஏற்படுகிறது. ஆனால் வனாந்தரத்தின் இயற்கையழகும் வசீகரிக்கத்தான் செய்கிறது.

தபோவனத்தையும் பூங்காவனமாக்கிக் காட்டும் பரம ரஸிகரான மகரிஷியல்லவா! பளிச்சென்று ஒரு சர்க்கத்தைச் சுவைக் களஞ்சியமாக்கி விடுகிறார். சில சர்க்கங்களில் சிற்சில பகுதிகளை இயற்கைச் சித்திரமாகக் காட்டுகிறார். சுற்றிச் சுற்றி வரும்போதும், உணர்ச்சியின் சிகரங்களைக் காட்டி உற்சாகப்படுத்துகிறார்.

கம்பனோ ஒரு பெருங்கோயிலை எழுப்பிக் காட்டுகிறான். 'வால்மீகி வளர்த்த சோலை அழிந்து விட்டதோ!' என்று கூட பிரமிக்கும் நிலையில் கோவிலும் மண்டபங்களும் கோபுரமுமாகக் காட்டுகிறான்.

சித்திர சாலைகளையும் சிற்ப விசித்திரங்களையும் தோற்றுவித்த வண்ணமா யிருக்கிறான், —'இதுவன்றோ இயற்கையையும் அணி செய்து காட்டும் அழியா அழகு' என்று ரஸிகர்கள் ஒருமுகமாக வியக்கும் படி.

சித்திர சாலைகளா? நாடக சாலைகளா! மனித உணர்ச்சிகளின் எத்தனை நடனங்கள், எத்தனை இசைச் சித்திரங்கள்! சிகரத்தின்மேல் சிகரமாக, எத்தனை கற்பனைச் சிகரங்கள்!

யுத்தகாண்டம் காவியப் பெருங் கோயிலுக்கு இசைந்ததொரு கலைப்பெருங் கோபுரம். முற்பகுதியிலேயே கவிச் சிற்ப வளம் நிறைந்த கோபுர தரிசனம் கிடைத்து விடுகிறது.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

73. அதிர்ச்சி மருத்துவன்

நோய், என்ன நோயோ ?

அரண்மனையில் ஒரு புறத்திலே பானங்கள் சித்தமாக வைக்கப்பட்டிருக்கின்றன. வெறி தரும் மதுபானங்களை விதவிதமாய்க் கவர்ச்சி தரும் தோற்றப் பொலிவுள்ள சாடிகளில் வைத்திருக்கிறார்கள்.

அரண்மனைப் பானசாலையின் அடுத்த பகுதி சங்கீத மஹல் (இசை மன்றம்). தெய்வ கீதம் பாடுகிறார்கள் தெய்வ மகளிர். இங்கே ரஸிகர் உள்ளத்திற்கு அமுதமான இசை விருந்து கிடைக்கும். மது வெறிக்கும் மேலான அமுத வெறியன்றோ ரஸிகர்களுக்கு இசை வெறி!

இதற்கு அடுத்த மன்றத்திலே இசைத் தென்றலில் இசைந்தாடும் ஓவியங்கள்! உயிர் பெய்த சித்திரங்கள் அபிநயித்துக் காட்டும் அதிசயங்களை என்னென்பது! இப்படி யெல்லாம் கண் விருந்துகள், செவி விருந்துகள்......

இந்த அரசன் தான் எப்பேர்ப்பட்ட ரஸிகனாக இருக்கவேணும்! ஆம்; ராட்சஸ சக்ரவர்த்தி ரஸிக சக்ரவர்த்தியும் கூட!

ஆனால் இப்போது ஏன் இந்த ரஸிகன் இப்படிப் பராமுகமாய்ச் செல்லுகிறான்! முகத் தாமரை ஏன் இப்படிக் கோணிப் போயிருக்கிறது!

'கொஞ்சம் தாகசாந்தி செய்து கொள்ளலாமே!' என்று சொல்லாமல் சொல்வது போல் மிளிர்கின்றன சாடிகளில், கிண்ணங்களில், பான வகைகள். 'பருகிக் களிப்பாய்' என்று பொங்குகிறது ஒரு சாடி. 'இந்த அமிர்த பானம் தேவர்க்கும் கிட்டாதது. தாகத்தோடு சோகத்திற்கும் சாந்திதான்!' என்று சிரிக்கிறது ஒரு மதுக் கிண்ணம்.

ராவணனுக்கோ இப்போது அந்தத் தாகமுமில்லை, மோகமுமில்லை. பான சாலையைத் தாண்டிப் போய் விடுகிறான்.

இசைமன்றம் தான் வசீகரிக்கிறதா! பானங்களை வாய் பருக மறுத்தது போல் செவி மறுத்து விடுகிறது தெய்வப் பண்களை.

உள்ளத்திற்குள்ளே 'சீதை, சீதை' என்ற ஜபத்தையும் சற்று மறக்கும்படி அவ்வுள்ளத்தைக் கள்வெறி கொள்ளச் செய்யும் தெய்வ கீதத்திற்கும் செவிடாகிப் போய்விட்டானே, காரணம் என்ன!

கூனி வளைந்த தாமரை போல் முகத்தைத் தொங்க விட்டுக்கொண்டே பான சாலை கடந்து, கான சாலையையும் கடந்து செல்லுகிறான். நடன சாலைக்கு வந்து விடுகிறான்.

அபிநயம் என்ற அந்தத் தெய்வ பாஷையும் இப்போது சற்றும் புரியவில்லை. உருக்கி வார்த்து உயிர் பெய்த தங்கச் சிலைகள் சலனங்களாலும் கண்களிலே அலை வீசும் உணர்ச்சிகளாலும் பேசுகின்றனவே, இந்தப் பேச்சிற்கும் ஒரே செவிடாகிக் குருடாகி அப்படியே அப்பால் சென்று கொண்டிருக்கிறான்.

சயன அறைக்குள் புகுந்து மெத்தென்ற படுக்கையில் விழுந்து விடுகிறான். குறிப்பறிந்து தொண்டாற்ற வல்ல ஏவலாளர்கள் ஜாடையாக முகம் காட்டியும் ஒரு பேச்சும் வாயிலிருந்து புறப்படவில்லை. ஏன் இப்படி!

ஒரு குரங்கினால் மகுடமணி பறிக்கப்பட்டது—மானமல்லவா பறி போய் விட்டது? அந்த மானக்கேடு துளைக்கிற தாம் மருமத்திலே,—ஏதோ ஒரு வேல் தன் வயிர மார்பிலும் புகுந்து துளைத்துத் தீராத வேதனை தருவது போல.

இந்த நிலையில்தான் வானளாவிய தன் அரண்மனைக்குள் பிரவேசிக்கிறான் ராவணேச்வரன், குனிந்த தலை நிமிராமலே;

மானத்தான் ஊன்றப்—
பட்ட மருமத்தான்,
வதனம் எல்லாம்

கூனல் - தா மரையின்
தோன்ற, வான்தொடும்
கோயில் புக்கான்,
மானத்தான் அல்லன்,
தெய்வப் பாடலான்
அல்லன், ஆடல் -
தானத்தான் அல்லன்,
மெல்லென் சயனத்தான்,
உரையும் தாரான்.

[மானத்தான் - மானத்தால். மருமத்தான் - மார்பை உடையவன். கூனல் தாமரை - வளைந்த தாமரை. கோயில் - அரண்மனை. ஆடல் தானம் - நர்த்தன சாலை. மெல்லென் சயனம் - மெத்தென்ற படுக்கை.]

இந்த நிலையில் மதுபானம் பிடிக்கவில்லை! ஆடல் பாடல் பிடிக்கவில்லை; பிடிக்கவில்லை யென்று பேசவும் பிடிக்கவில்லை!

சுர நோயால் வாய் கசக்கப் பால் ருசிக்குமோ? மானத்தால் மனம் கசக்க ஒன்றுமே பிடிக்கவில்லை.

சுமக்க முடியாத பெருஞ் சுமை ஏற்றிய பார வண்டியில் பூட்டிய காளை கீழே படுத்து விடுவதுபோல் படுக்கையில் விழுந்து விடுகிறான்.

மூடிய வாய் திறந்தது!

இந்த நிலை மிஞ்சிப் போய்விடாதபடி ராவணன் வாயிலிருந்து ஒரு வார்த்தையாவது புறப்பட வேண்டாமா! உற்றார் உறவினரால், நண்பரால், பணியாளரால், பிறரால் கலையாத மௌனம் திடீரென்று கலைந்துவிடுகிறது. வாயில் காவலன் வந்து ஒரு வார்த்தை சொன்னதும், வாய் திறக்கிறது. வாயைத் திறந்துதான் இங்கும் வைத்தியம் நடைபெற வேண்டியிருக்கிறது!

ஒரு சொல்தான் காரணம். பகைவர் சேனையை அணுகி அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்து வரும்படி ராவணன் ஏற்கெனவே சார்த்தூலன் என்ற ஒற்றனை ஏவியிருந்தான். அவன் வந்து வாசலில் காத்துக் கொண்டிருக்கிறான் என்பது தான் வாயில் காவலன் சொன்ன செய்தி.

வாயில் காப்பான் புத்திசாலி, ராவணன் இருக்கும் மனநிலையை ஊகித்துக் கொண்டான். 'சார்த்தூலன் வந்துள்ளான்' என்றால் போதாது எனத் தீர்மானித்து,

சேயவர் சேனை
நண்ணிச் செய்திறம்
தெரித்தி நீஎன்(று)
ஏயவன் எய்தி
னான்

[சேயவர் - தூரத்திலிருந்த எதிரிகள். நண்ணி - கிட்டி. தெரித்தி - தெரிவிப்பாய். ஏயவன் - நீ ஏவியவன்.]
என்று செய்தி சொல்லுகிறான்.

இந்தச் சார்த்தூலனுடைய சாமர்த்தியத்தைக் கவிஞன் பின்வருமாறு குறிப்பிடுகிறான்:

தாயினும் பழகி -
னார்க்கும் தன்னிலை
தெரிக்க லாகா
மாயவல் உருவத் -
தான்.

[தாயினும் - தாயைக் காட்டிலும். தெரிக்கலாகா - தெரிந்துரைக்க முடியாத. வல் உருவம் - வலிய உருவம்.]

தாயைக் காட்டிலும் அன்போடு தன்னிடம் பழகிய நண்பர்களும் இந்தச் சார்த்தூலனுடைய நிலையைத் தெரிந்துரைக்க முடியாதபடி திணறிப் போவார்களாம். அப்படிப்பட்ட பொல்லாத மாயச் செயல்களிலும் மாறு வேஷங்களிலும் வல்லவனாக இருக்கிறானும் இந்த ஒற்றன்.


இந்த ஒற்றனைப் பற்றிய குறிப்புடன், மகோதரனைக் குறித்து விபீஷணன் ஏற்கெனவே கூறியிருப்பதை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

தாயை யாயினும்
சலித்திடு வஞ்சனை
தவிரா
மாயை யான்உளன்
மகோதரன் என்றொரு
மறவோன்

என்பது மந்திரி மகோதரனது திறமை.

தாயானாலும் அவளையும் கலங்கச் செய்யும் வஞ்சனைத் தன்மை நீங்காத மாயாவி மகோதரன் என்பதால், இந்த மந்திரி வஞ்சனையைக் கலையாகப் பயின்றவன் என்பதும், கலைஞனுக்குக் கலையிலுள்ள மோகம் இவனுக்கு வஞ்சிக்கும் தொழிலில் உண்டு என்பதும் குறிப்பு.

இத்தகைய மந்திரியோடு கூடிய ராவணனுக்கு வாய்த்திருக்கும் ஒற்றனது பொருத்தம் உய்த்துணரத்தக்கது.



ஒற்றன் அரண்மனை வாசலுக்கு முன்னே வந்து நின்றதும் அதைக் கண்டவுடனேயே உள்ளே ஓடிச் செய்தி சொல்லுகிறான் வாயில் காப்பான். வாயிலில் நின்று கொண்டிருக்கும் ஒற்றனது அடக்கமும், வாயில் காவலனது ஆத்திரமும், படுக்கையில் கிடக்கும் அரசனது சோர்வும் ஒரே பாட்டில் வெகு நயமாக அமைந்து காண்கின்றன.

இந்தப் பாட்டு முழுமையும் உற்று நோக்கத் தக்கது. பாட்டின் வாயிலாக நாம் மூவரையும் – முகத்தினோடு அகத்தையும் உற்று நோக்குகிறோம்;

தாயினும் பழகி
னார்க்கும் தன்னிலை
தெரிக்க லாகா
மாயவல் உருவத்
தான்முன் வருதலும்,
வாயில் காப்பான்
'சேயவர் சேனை
நண்ணிச் செய்திறம்
தெரித்தி நீ என்று
ஏயவன் எய்தி
னான்' என்(று), அரசனை
இறைஞ்சிச் சொன்னான்.

எதிரிகளின் செயல்களைத் தெரிந்து கொண்டு வரவேண்டுமென்று தன்னால் ஏவப்பட்ட சார்த்தூலன் வந்துள்ளான் என்றதும்,

உரையும் தாரான்

என்ற நிலையில் படுக்கையிலே கிடந்த ராவணனது வாயிலிருந்து வார்த்தை புறப்படுகிறது.

ஒரே வார்த்தை. சின்னஞ் சிறிய வார்த்தை தான். 'அழை' என்கிருன்; அவ்வளவு தான்.

ஒற்றன் வைத்தியம்

வாயில் காவலன் அழைக்கவே, நிதானமாக உள்ளே போகிருன் ஒற்றன். நிதானமாகவே அடி வணங்குகிருன். தாளுக ஒன்றும் சொல்லாமலே மௌனமாயிருக்கிருன்.

'சொல்லப்பா' என்கிருன் ராவணன். 'நீ அறிந்து வந்திருக்கும் செய்திகளையெல்லாம் சொல்வாய்' என்கிருன்.

'பிழையற அறிந்த
எல்லாம் உரைத்தி' என்(று)
அரக்கன் பேச,

அப்போதும் உடனே பதில் சொல்லிவிடவில்லையாம் சார்த்தூலன்.

இந்த ஒற்றனுடைய மௌனமும் அடக்க ஒடுக்கமும் ராவணனுடைய உள்ளத்திலே வேகமான சலனங்களை உண்டாக்குகின்றன. இந்தச் சலனங்களையும் உணர்ந்து கொண்டு தான் பதில் சொல்லுகிருன் சார்த்தூலன்.

ஒற்றன் ராவணனை முகம் நோக்கிப் பேசவில்லை. 'முகத்திளுல் அகத்தை நோக்கி'ப் பேசுகிருன்.

குகையிலே சிங்கம் கிடப்பதுபோலக் கிடக்கிருனும் ராவணன் படுக்கையிலே. இந்தச் சிங்கத்தால் ஒற்றனுடைய கூர்மையான பார்வையிலிருந்து தன் மன வருத்தத்தை மறைத்துக் கொள்ள முடியவில்லை.

ராவணன் வெளியிடாது தன் மனக் குகையில் மறைத்து வைத்திருந்த அந்த வருத்தத்தை அப்படியே தெரிந்து கொண்டு அதில் பங்கு கொள்பவன் போலக் காணப்படுகிருன். ஆஹா, எப்படி ஒடுங்கிப் போகிறது இந்த ஒற்றனுடைய உடம்பு இப்போது!

'மாயவல் உருவத்தான்' அல்லவா! ராவணன் இவனை நன்கறிந்தவன்தான். எனினும் இவனுடைய நிலையை இப்போது தெரிந்து கொண்டானில்லை.

தாயினும் பழகி
ஞர்க்கும் தன்னிலை
தெரிக்க லாகா
மாயவல் உருவத் –
தான்,

ராவணனுக்கு ஒரு பிதிராகவே இச் சமயம் தோன்றுகிருன்.

பையப் பேசுகிருன். பதறாது சிதறாது பேசுகிருன். மூன்று கவிகளில் மாற்றார் செய்தியை உணர்த்தப் போகிருன்.

அந்தச் செய்தியைச் சார்த்தூலன் எவ்வளவு அறிவுத் திறமையுடன் தெரிவிக்கப் போகிருன்! ஆனல் அதற்கு முன் இந்த நுண்ணறிஞன், படுக்கையிலே கிடந்த ராவணனைத் தன் முன்னே விரித்துக் கிடக்கும் ஒரு புத்தகத்தைப் படிப்பது போல் படித்து முடிக்கிருன்! பிறகு தான் மாற்றார் செய்தியைச் சொல்லப் போகிருன்.

உள்ளே பையச் சென்று பையச் செய்தி கூறத் தொடங்கும் சார்த்தூலனையும், இந்தப் 'புலி'க்கு முன் ஒரு கிழச் சிங்கம் போலப் படுத்திருக்கும் ராவணனையும் இந்தப் பாட்டுக் கண்ணுடி வாயிலாக நன்ருய்ப் பார்த்து விடுவோம்:

'அழை'என எய்திப்
பாதம் வணங்கிய
அறிஞன் தன்னைப்
'பிழையற அறிந்த
எல்லாம் உரைத்தி யென்(று)'
அரக்கன் பேச,
முழையுறு சீயம்
அன்னுன் முகத்திளுல்
அகத்தை நோக்கிக்
குழையுறு மெய்யன்,
பைய வரன்முறை
கூற லுற்ருன்.

[முழையுறு சீயம் அன்னுன் – குகையிலே பொருந்திக் கிடக்கும் சிங்கத்தை யொத்த ராவணன். குழையுறு மெய்யன்- குழைந்து ஒடுங்கும் உடலையுடையவனய். வரன் முறை – தான் உணர்ந்த முறைப்படி.]

சார்த்தூலன் கூழைப்பார்வை பார்த்து ஒரு கூழைக் கும்பிடு போட்டு 'அப்பாவி' போல் குழைந்து நின்று பேசுகிருன்.

ராவணன் தொங்கிய முகத்துடன், வானளாவிய மாளிகைக்குள் வந்தான். நெஞ்சிலே ஏதோ ஒரு வேல் எப்படியோ பாய்ந்து துளைக்கும் உணர்ச்சியுடன் உள்ளே வந்து சேர்ந்தான்.

அந்த வேலை வெளியே இழுக்தெறியும் ஒற்றன் வார்த்தை யென்று நம்புகிருன். ஆனல் அந்த வார்த்தையோ அந்த வேலை மேலும் அமுக்குவது போல வந்து விழுகிறது.

எனினும் இந்த அதிர்ச்சி, இந்தத் தாக்குதல், ராவணனுடைய சோர்வைப் போக்கி விடுகிறது. படுத்துக் கிடந்த சிங்கம் வேலை எப்படியோ உதறித் தள்ளி விட்டுச் செயலாற்றத் தொடங்குகிறது.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

74. ஆலோசனையும் அணிவகுப்பும்

மூக்கறுநி முதலான குறிகளாலும், சயனத்திலே கிடந்த அந்த நிலையில் தன்னை நோக்கி அவன் சொன்ன அந்த உரையினாலும் ராவணனுடைய நோய் நன்கு புலனாகி விட்டது அந்த ஒற்றனுக்கு. எத்தகைய வைத்தியத்தால் இந்த நோயைக் குணமாக்க முடியும் என்பதும் இனிது புலனாகி விட்டது.

வைத்தியம் பலிக்கிறது

'நீ அறிந்தன எல்லாவற்றையும் உரைப்பாய்; பிழையற உரைப்பாய்' என்றான் ராவணன். ராவணன் எதிர்பார்த்த அளவிற்கு விவரமாகச் சார்த்தூலன் பதில் சொல்லவில்லை.

சுருக்கமாக, அனுமன் மேற்குப் பக்கத்திலே முற்றுகை செய்வதையும், தன்னைப் பிரியாமல் பதினேழு வெள்ளம் சேனையுடன் நிற்குமாறு சுக்கிரீவனை ராமன் ஏவியதையும், தென் திசையிலும் கீழ்த் திசையிலும் முறையே அங்கதனும் நீலனும் போர் செய்யச் சித்தமாகி யிருப்பதையும் சார்த்தூலன் தெரிவிக்கிறான்.

பிறகு, வானர சேனைக்கெல்லாம் உணவு தரும் ஏற்பாடு எவ்வளவு செவ்வையாகச் செய்யப்பட்டிருக்கிறது என்கிறான்.

நாலு திசை வாசல்கள்தோறும் அவ்வப்போதுள்ள நிலைமையை ஆராய்ந்து தெரிவிக்க விபீஷணனை நியமிக்கப் பட்டிருப்பதாகவும் சொல்லுகிறான்.

கடைசியாக, ராம லட்சுமணர் வட திசை வாசலில் ராவணனைச் சந்திக்கச் சித்தமா யிருப்பதாய்க் கூறி முடிக்கிறான்.

'எதிரிகளின் ஏற்பாடு இது' என்று இப்படிச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதே ராவணனுக்கு இப்போது தேவையான அதிர்ச்சி வைத்தியம் என்று சார்த்தூலன் விரைவில் நிச்சயித்துக் கொண்டான்.

மூன்றே கவிகளில் மாற்றார் செய்தி தெரிவிக்கப்படுகிறது.

பிழையற அறிந்த
எல்லாம் உரைத்தி

என்று கட்டளையிட்டான் அரக்கர்கோன். பிழையின்றி, வருணனையுமின்றி, நடந்த விஷயத்தை அப்படியே சொல்லிவிடுகிறான் சார்த்தூலன்.

'வீரியமுள்ளவனே!' என்று ராவணனை விளித்துச் சார்த்தூலன் முதன் முதல் ஒரே மூச்சில் இரண்டு செய்திகளை அடுக்கி விடுவதை முதலாவது கவியில் காண்கிறோம்:

வீரிய! விரைவின்
எய்திப் பதினெழு
வெள்ளத் தோடும்

மாருதி மேலை
வாயில் உழிஞைமேல்
வருவ தானான்;

ஆரியன் அமைந்த
வெள்ளம் அத்தனை
யோடும் வெற்றிச்

சூரியன் மைந்தன்
தன்னைப் பிரியலன்
நிற்கச் சொன்னான்.

[மாருதி – அனுமன். உழிஞை – பகையரண் வளைப்போர் சூடும் மாலை. உழிஞைமேல் வருவதானான் – உன் மதிலை வளைத்து முற்றுகை செய்வதில் முண்டியிருக்கிறான். ஆரியன் – சிறந்தவன்;

(இங்கே) ராமன். அமைந்த – பொருந்திய. வெள்ளம் அத்தனையோடும் – அத்தனை வெள்ளம் சேனையுடனே. சூரியன் மைந்தன் தன்னை – சூரிய புத்திரனான சுக்கிரீவனை. பிரியலன் நிற்க – பிரியாமல் நிற்க.]

'விரிய!' என்று ராவணனை விளித்துச் சுக்கிரீவனை 'வெற்றிச் சூரியன் மைந்தன்' என்று குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. 'வெற்றி' இந்த வீரியனையும் மகுடபங்கம் செய்த காரியம் தான், வெற்றி தான்!

சுக்கிரீவனது வெற்றியைக் குறிப்பிட்டதுமே, 'பழிக்குப் பழி வாங்கி விடுவோம் விரைவில்' என்று ராவணனுள்ளம் துடித்திருக்க வேண்டும், இல்லையா?

அந்தக் குறிப்பையும் அறிந்து கொண்டு,

சூரியன் மைந்தன்
தன்னைப் பிரியலன்
நிற்கச் சொன்னான்

என்கிறான்.

பதினேழு வெள்ளம் சேனையுடன் ராமனைப் பிரியாமல் நிற்கிறான் சுக்கிரீவன் என்கிறான். ஆகவே, 'உன் எண்ணம் – பழி வாங்கும் எண்ணம் – பலிக்காது' என்பது குறிப்பு.

தான் விரைந்து சென்று தெரிந்து வந்த செய்தியை விரைவாகவே மேலும் சொல்லிக் கொண்டே போகிறான் இந்த வேவுகாரப் புலி:

அன்றியும், பதினேழ்
வெள்ளத்(து) அரியொடும்
அரசன் மைந்தன்

தென்திசை வாயில்
செய்யும் செருவெலாம்
செய்வ தானான்;

ஒன்று பத்தாறு
வெள்ளத்(து) அரியொடும்
துணைவ ரோடும்

நின்றனன் நீலன்
என்பான் குணதிசை
வாயில் நெற்றி.

[அரி – குரங்கு. அரசன் மைந்தன் – வாலி ராஜாவின் புத்திரனான அங்கதன். வாயில் செய்யும் – வாசலிலே செய்கிற. செருவெலாம் செய்வதானான் – போரையெல்லாம் செய்யப் பொருந்தி நிற்கிறான். ஒன்று பத்து ஆறு வெள்ளத்து அரியொடும் – பதினேழு வெள்ளம் குரங்குச் சேனையுடனும். குணதிசை – கிழக்குத் திக்கு. நெற்றி – முகப்பு.]

இந்த வானரச் சேனைக்கெல்லாம் உணவு வேண்டுமல்லவா! வானரர்களோ ஊனுணவு கொள்ளாதவர்கள். எனவே,

இம்பரின் இயைந்த
காயும் கனியும்கொண்(டு)
இரண்டு வெள்ளம்

வெம்புவெஞ் சேனைக்
கெல்லாம் உணவுதந்(து)
உழல விட்டான்.

[இம்பரின் – இவ்வுலகிலே. வெம்பு வெஞ்சேனை – கோபித்துப் போர் செய்யும் கொடிய சேனை. உணவு தந்து உழல விட்டான் – உணவு தந்து திரியுமாறு ராமன் விட்டிருக்கிறான்.]

என்கிறான் ஒற்றன்.

'இந்த ஏற்பாட்டிலே உன் தம்பிக்கு என்ன அலுவல் தெரியுமா?' என்று ஒரு கேள்வியை எழுப்பி அதற்குப் பதில் சொல்வது போல்,

உம்பியை வாயில்
தோறும் நிலை தெரிந்(து)
உணர்த்தச் சொன்னான்

[உம்பி – உன் தம்பி.]

என்கிறான் சார்த்தூலன்.

இத்தனை ஏற்பாடுகளையும் செய்து விட்டு உன் தம்பிக்கும் ஒரு சரியான உத்தியோகம் கொடுத்து விட்டுத் தம்பியும் தானுமாக ராமன் வடதிசை வாசலில் நிற்கிறானும்:

'தம்பியும் தானும்
நிற்ப தாயினான்;
சமை(வு)ஈ தெ'ன்றான்

[சமைவு – நடந்துள்ள ஏற்பாடு. ஈது – இது.]

வைத்தியம் பலித்துவிட்டது, தழல் வீசுகிறது கண்களிலே; கொடுமையும் தெரிகிறது. பற்களை நெறு நெறென்று கடிக்கிறான், சார்த்தூலனைப் பார்க்கும் பார்வையிலேயே யுகாந்த காலத்தின் உக்கிரமான சாயை தோன்றுகிறது.

ஒற்றன் உள்ளம் களிக்கிறது, எதிர் பார்த்ததற்கு மேல் பலன் கிடைத்து விட்டதே யென்று.

'போர் தாளிபடப் போகிறது நாளை! அந்தப் பகைவர்களின் இரத்தத்தைக் கொண்டே போர்ப் புழுதியைப் போக்கு

வேன்!' என்று கர்ஜிக்கின்றன பத்துப் பேய் வாய்கள்.

படுக்கையை விட்டுத் துள்ளியெழுகிறான். ஒரே பாய்ச்சலில் படுக்கை யறைக்கு வெளியே போகிறான். மந்திராலோசனை மன்றத்துக்கே போய்விடுகிறான்.

பளிங்கிலே களங்கம்!

அங்கே பளிங்கு மணியால் இயன்றதொரு ஆசனத்தில் வீற்றிருக்கிறான். சோர்வுக் குறிகளெல்லாம் அறவே மறைந்து விட்டன.

இங்கே வந்து சேருமாறு இட்ட கட்டளைக் கிணங்க மந்திரிமார் வந்து சேர்கிறார்கள். இவர்களும் சார்த்தூலனைப்போல் அறிஞர்களே.

மையறு மரபின்
வந்த அமைச்சர்

என்பது கவிக் கூற்று.

ஆனால் 'அரசன் எவ்வழி அவ்வழி அமைச்சர்' என்பது தானே இங்கே மந்திராலோசனையின் மரபு!

ராவணன் அமைச்சரை நோக்கி வினவுகிறான்:

அளந்தறி வரிய
ராய அமைச்சரை
அடங்க நோக்கி,

'வளைந்தது குரங்கின்
சேனை வாயில்கள்
தோறும் வந்து;

விளைந்தது பெரும்போர்
என்ன விட்டது;
விடாது நம்மை;

உளைந்தனம்; என்ன
எண்ணி என்செயற்-
குரிய?' என்றான்.

[அளந்தறிவரியராய - அளந்தறிவதற்கு முடியாதபடி மிகப் பலராகிய. அடங்க - முழுவதும். என்ன விட்டது - என்னு மாறு தொடங்கி விட்டது. விடாது நம்மை - அது இனி நம்மை விடாது. உளைந்தனம் - நாம் மனம் உளைந்திருக்கிறோம். என் செயற்கு உரிய ?- என்ன செய்வதற்கு உரியது ?]

கணிதமும் கருவியும்

பெருங் கூட்டமாக வந்திருந்த அமைச்சர்களில் நிகும்பன் எழுந்து பெருங் கோபத்தோடு பேசுகிறான். 'எழுபது வெள்ளம் என்ற கணக்கில் குரங்குக் கூட்டம் நகர மதிலை வளைந்து கொண்டதென்று மனம் அழிகின்றாயே! நம்முடைய சேனா சமுத்திரம் ஆயிரம் வெள்ளமன்றோ!' என்கிறான்.

மேலும் பேசுகிறான் நிகும்பன்;

எழுமழு தண்டு
வேல்வாள் இலைநெடுஞ்
சூலம் என்றிம்

முழுமுதற் படைகள்
ஏந்தி இராக்கதர்
முனைந்த போது,



தொழுதும் படைகள்
கைவிட் டோடுவார்
சுரர்கள் என்றால்,

விழுமிது குரங்கு
வந்து வெறுங்கையால்
கொள்ளும் வென்றி !

[எழு – ஒரு வகைப் படைக்கலம். இலை நெடுஞ் சூலம் – இலை வடிவில் செய்யப்பட்ட நெடிய சூலம். முழுமுதற் படைகள் – சிறந்த முதன்மை பெற்ற படைக்கலங்கள். சுரர்கள்–தேவர்கள். விழுமிது–மிகச் சிறந்திருக்கிறது. வென்றி – வெற்றி.]

கண்களை உக்கிரமாகத் தீப்பறக்க விழித்துப் பேசுகிறான். ஓர் இடிச்சிரிப்பும் சிரித்துக் கொள்கிறான். பூமியில் கையால் அடிக்கிறான்.

இடையே ஒரு வேதனைக் குரல்

இப்படியெல்லாம் இவன் பேசும் போது இந்த அட்டகாச – ஆர்ப்பாட்டங்களுக் கிடையே ஒரு குரல் கேட்கிறது, ஒரு வேதனைக் குரல். மாதுலனாகிய தலைவன் – மாலி – பேசுகிறான்.

மாதுலத் தலைவன் ஆரவாரக் குரலில் பேசவில்லை நிதானமாகத்தான் இரங்கிப் பேசுகிறான் :

வேதனைக் காமம்
அந்தோ வேரொடும்
கெடுத்தது !

என்பதாக.

நிகும்பன் சீறிக் கூறியதையும் மாலி அன்புக் குரலில் வருந்திப் பேசியதையும் முரண்படத் தொடுத்துக் காட்டுகிறான் கவிஞன் :

ஈதிவண் நிகழ்ச்சி
என்னா, எரிவிழித்(து)
இடியின் நக்குப்

பூதலத்(து) அடித்த
கையன் நிகும்பன்என்(று)
ஒருவன் பொங்க,

'வேதனைக் காமம்
அந்தோ வேரொடும்
கெடுத்த(து)' என்னா

மாதுலத் தலைவன்
பின்னும் அன்பின்ஓர்
மாற்றம் சொன்னான்.

[ஈது இவண் நிகழ்ச்சி – இப்போது நிகழ வேண்டியது இதுதான் ; போரிடுவது தான். என்னா – என்று சொல்லி. எரி – தீ. இடியின் நக்கு – இடிபோலச் சிரித்து. மாதுலத் தலைவன். மாதுலனாகிய தலைவன். மாற்றம் – வார்த்தை.]

எத்தனையோ ஆயுதங்களுடன் அரக்கர்கள் போரில் முனைந்திருக்கும்போது குரங்கு வெறுங் கையைக் கொண்டு வெற்றி பெறுவது சாத்திய மில்லையே என்று சொன்ன நிகும்பனுடைய அபிப்பிராயத்தை மறுத்துப் பேசுகிறான் மாதுலத் தலைவன் :

புக்(கு)எரி மடுத்(து)இவ்
ஊரைப் பொடிசெய்து
போயி னாற்குச்

சக்கரம் உண்டோ ?
கையில் தனுஉண்டோ
வாளி உண்டோ ?

இக்கிரி பத்தின்
மௌலி இனமணி
யடங்கக் கொண்ட

சுக்கிரீ வற்கும்
உண்டோ சூலமும்
வாளும் வேலும்?

[புக்கு–புகுந்து. தனு – வில். – அம்பு. இக்கிரி பத்தின் மௌலி – பத்து மலை போன்றுள்ள மகுடங்களின். இன மணி–தொகுதியான இரத்தினங்கள்.]

இப்படிச் சொன்ன மாலி ராவணனை நோக்கி,

அடைக்கலம் புகுவ
தல்லால், இனிப்புகும்
அரணும் உண்டோ ?

என்று திடமாகப் புத்திமதி சொல்லுகிறான்.

ராவணன் மாலியை அதட்டி அந்தப் பேச்சை நிறுத்திவிடுகிறான். உடனே மந்திராலோசனை மன்றத்திலேயே சேனைத் தலைவனான பிரகத்தனை நோக்கி, 'நீ இருநூறு வெள்ளம் அரக்கச் சேனையுடன் கீழ்த் திசை வாசலில் நிற்க வேண்டும் என்று கட்டளையிடுகிறான்.

மந்திராலோசனை இந்த நிலையிலேயே முடிந்து விடுகிறது 'மகோதரக் காளையே !' என்று கூப்பிட்டு, 'நீ மகா பாரி சுவனுடனும் இருநூறு வெள்ளம் சேனையுடனும் தெற்கு வாசலுக்குப் போய் அந்த நமன் திசையிலே குரங்குகளையெல்லாம் கொன்று நமனுலகிற்கு அனுப்பி விட வேண்டும்' என்று கர்ச்சிக்கிறான்.

பிறகு இந்திரஜித்திடம், 'நீ உன் பெரும் படைகள் சூழ மேற்குத் திக்கில் அனுமனை எதிர்க்கப் போகவேண்டும்' என்கிறான். நகரைக் காக்க விருபாட்சனை நியமித்துவிட்டு, 'வட திசை வாயில் காப்பேன் நான்' என்கிறான் ராவணன்.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

75. முற்றுகையும் தூதும்

(ஆதி காவியப் போக்கு)

சூத்துச் சண்டையிலே ராவணனை மகுடபங்கம் செய்து திரும்பிய சுக்கிரீவனது செய்கையை ராமன் உடன்படாது கண்டித்ததும், 'உன் தேவியைக் கவர்ந்து சென்ற அரக்கனைக் கண்ட பிறகு, என் உடல் வலிமையை நான் உணர்ந்திருக்கையில் எவ்வாறு பொறுத்திருப்பேன்!' என்று சுக்கிரீவன் சொன்னதாக வால்மீகி கூறுகிறாரல்லவா? இந்தச் சமாதானத்தால் ராமன் மிக்க மகிழ்ச்சியடைந்து, தம்பியை நோக்கிச் சேனைகளைச் சித்தப்படுத்துமாறு கட்டளையிடுவதாகத் தெரிவித்துக் கதையை மேலே நடத்திக்கொண்டு போகிறார் ராமாயணத்தின் ஆதி கவி.

கதை ரஸமாக நடக்கிறது

'லட்சுமணா, நமது சேனைகளைச் சேனாபதிகளின் வசத்தில் வைத்து அணி வகுத்துப் போருக்குத் தகுந்த முயற்சியுடன் இருப்போம்' என்றான் ராமன். படை வீரர்களைச் சௌகரியமாக வசதியான ஓரிடத்தில் வைக்க வேண்டும் என்பதையும் வற்புறுத்துகிறான்.

'குளிர்ந்த நீர்வளமுள்ள' இடத்திலே படை வீரர்கள் படைத் தலைவர்களின் வசமாக இருக்க வேண்டும் என்று கூறுவதிலிருந்து, ராமனுக்குச் சாதாரணப் படைவீரன் மீதுள்ள அன்புடன், தலைமைப் பெரும் பதவிக்குரிய திறமையும் புலனாகிறது. அந்த இடம் கனிகள் நிரம்பிய காட்டுப் பிரதேசமாக இருக்க வேண்டுமென்றும் ராமன் சொன்னான்.

இப்படி ராமன் சொல்லி முடித்த போது, கடுமையாகக் காற்று வீசியது. பூமி அதிர்ச்சியும் ஏற்பட்டதாம். மலைச் சிகரங்கள் அசைவது போலத் தோன்றி மரங்கள் விழுந்தனவாம்.

விண்ணிலே மேகங்கள் தோன்றின. அவை பல கொடிய மிருக வடிவங்களில் காணப்பட்டனவாம். அந்த மேக-மிருகங்கள் கர்ஜிக்கத் தொடங்கி விட்டன இடிக் குரலில். மழை பொழிந்ததாம் செந்நிறமாக,—இரத்தத் துளிகளைப் போல.

இப்போது மாலைப் பொழுது சிவந்த கலவைச் சந்தனம் போலக் காணப்படுகிறது. திடீரென்று சூரியன் தெரிகிறது நெருப்பு விழுவது போல! பறவைகளும் விலங்குகளும் எதிர்நோக்கிப் பரிதாபமாய்க் கத்துகின்றன.

இராக் காலம். சந்திரன் ஒளியற்றதாகக் காணப்படுகிறது. குளிர்ச்சியே இல்லை; ஒரே தாபம், தகிப்பு. நட்சத்திரங்களும் எப்பொழுதும் போலக் காணப்படவில்லை என்கிறான் ராமன் நரிகளின் அமங்களமான ஊளைகளைக் கேட்டுக்கொண்டே.

ஏதோ ஒரு யுக முடிவு போலல்லவா தோன்றுகிறது என்று கூட ராமன் சொல்லுகிறான். உலகமெல்லாம் அழிந்து போகும் முடிவுக் காலமா இது!

'இன்றே இப்போதே சடுதியில் இலங்கையை முற்றுகை செய்வோம்' என்கிறான் ராமன். இந்தத் துஷ்ட ராட்சஸர்களின் அதர்ம யுகத்தை முடித்து விடுவோம் என்கிறது ராமனது தர்மாவேசம்.

நிமித்தங்களெல்லாம் தீயோரின் நாசத்திற்கே முற்குறி என்பது சத்திய வீரனாகிய ராமனது திருவுள்ளம். தன் உள்ளத்தைத் தம்பிக்கு வெளியிட்டபடியே தர்மாத்மா சுவேல மலையிலிருந்து வேகமாய்க் கீழே இறங்கினான் என்பர் வால்மீகி.

ராமன் தன் வானரப் பெருஞ்சேனையைக் கண்ணுற்று, 'இவர்களைப் பகைவர்களால் தடுக்க முடியாது' எனக் கருதி மகிழ்ந்தான். காலமறிந்து அதற்கு ஏற்றபடி நடந்து கொள்ளும் ராமன் தன் சேனையைப் போருக்குச் சன்னத்தமாக்க வேண்டிய ஏற்பாடுகளைச் சுக்கிரீவனுடன் செய்து முடித்தான்.

அப்படிச் செய்து முடித்த பின், விடியற்காலத்தில் ராமன் பூரித்த புயத்திலே திகழும் வில்லுடன்,பெரும்படை தொடர்ந்து வர இலங்கைமாநகரை எதிர்நோக்கி முன்னே கம்பீரமாகச் சென்றான்.

ராமனை நெருங்கித் தொடர்ந்து சென்றனர் விபீஷணன், சுக்கிரீவன், அனுமன், ஜாம்பவான், நீலன் முதலானவர்கள்.

லட்சுமணன் உடன் சென்றான்.

வானரப் பெருஞ்சேனை பூமியை மறைத்துக் கொண்டு போவது போலப் போயிற்று. மரங்களையும் கற்களையும் கருவிகளாகக் கொண்டு சென்றார்களாம் வானர வீரர்கள். மலைச் சிகரங்களையும் எடுத்துச் சென்றதாகக் கூறுகிறது வால்மீகியின் மனோபாவம்.

இப்படி நடந்து போய் வெகு நேரம் சென்ற பிறகு ராம லட்சுமணர்கள் லங்கா பட்டினத்தை அடைந்தார்கள். கொடிகள் பறப்பதைக் கண்டார்கள்: அழகிய தோட்டங்களையும் கண்ணுற்றார்கள். நெருங்க முடியாத உயர்ந்த மதில்களையும் வாசல்களையும் பார்த்தார்கள்.

ராமனது கட்டளைப்படி வானர சேனைத் தலைவர்கள் ஒவ்வொருவரும் குறிக்கப்பட்ட இடத்திலிருந்து முற்றுகை செய்தார்கள். நீலன் என்ற சேனாபதி கீழைக்கோபுர வாசலில் இருந்தான், அங்கதன் தெற்கு வாசலை முற்றுகை செய்தான். அனுமன் மேற்கு வாசலில் போய் நின்றான், சுக்கிரீவன் பல வானரத் தலைவர்களுடன் மேற்கு வாசலுக்கும் வடக்கு வாசலுக்கும் இடையே ராமனுக்குச் சமீபமாகவே நின்று கொண்டிருந்தான்.

ஒரு மலையின் கொடுமுடிபோல் ஆகாயத்தை அளாவி நின்றது லங்கா பட்டணத்தின் வடக்கு வாசல். ராமன் லட்சு



மனுடன் அந்த வாசலுக்கு எதிரே தன் சேனைகளைக் காத்துக் கொண்டு நின்றான்.

மிகமிகக் கொடியவர்களான அரக்கர்கள் அந்தக் கோட்டை வாசலில் ஆயுதபாணிகளாக நின்று பாதுகாத்து வருகிறார்கள். எண்ணிறந்த கொலைக் கருவிகளும் கவசங்களும் பார்ப்பவர்களுக்குப் பெரும் பயம் உண்டாகும்படி இங்கே காணப்பட்டன. ஏனென்றால், இங்கே தான் லோக பயங்கரனான ராவணேச்வரன் இருக்கிறான்.

இந்த விதமாக முற்றுகை ஆரம்பமாகி விடுகிறது. வானர வீரர்கள் மரமும் கையுமாய் அல்லது கல்லும் கையுமாய், (மலைச்சிகரமும் கையுமாய் என்றே வால்மீகி சொல்லுகிறார்). தங்கள் பற்களை வெளியே காட்டிக் கொண்டு (' இவையும் எங்கள் ஆயுதங்கள் ! என்று கூறுவது போல) போர் புரிய மிகவும் குதூகலமாயிருக்கிறார்கள்.

கல்லும் மரமும் தான் வேணுமா இவர்களுக்கு என்று கூடத் தோன்றுகிறதாம். பற்களும் நகங்களுமே ஆயுதமாகப் போர்ச் சித்தமா யிருக்கிறார்களல்லவா !

இந்த வானரர்களின் குதூகலத்தைக் குறிப்பிடும் வால்மீகி நகைச்சுவை தோன்ற, 'எல்வாரும் தங்கள் தங்கள் வால்களைத் தூக்கிக்கொண்டு' தயாராகி விட்டதாய்க் கூறுகிறார். அளவிட முடியாத பலத்தோடு கூடிய குதூகலம் இது என்றும் சுட்டிக் காட்டுகிறார்.

அரக்கர் மீது இவர்களுக்குள்ள கோபத்தைக் குறிப்பிடும்போது, இந்த வானரர்களின் செம்முகங்கள் கோபத்தாலும் சிவந்தன என்கிறார் ; உடல்கள் சிலிர்த்தன என்கிறார்.

வானர வீரர்கள் நிரம்பி நின்ற காட்சியை, இப்பெருங் கூட்டத்தால் பூமியே மறைக்கப்பட்டதாகவும் வருணிக்கிறார் முனிவர். இலங்கையை நாலு புறத்திலும் வானர சமுத்திரம் மூடிவிட்டது என்கிறார்.

இப்படிச் சூழ்ந்து கொண்ட வானரர்களைக் கண்டு அரக்கர்களும் ஆச்சரியப்படுகிறார்களாம். கரை கடந்து பொங்கும் சமுத்திரம்தான் சூழ்ந்து கொண்டதோ என்று தோன்றுகிறது, — முற்றுகை செய்வோரின் போர் முழக்கங்களைக் கேட்டதும்.

லங்கா பட்டணம் தன் மதில்களுடனும் தோரணங்களுடனும் சோலைகளுடனும் மலைகளுடனும் கிடு கிடென்று நடுங்குகிறது இந்தத் 'திடீர்' முற்கையின் காரணமாக என்பது வால்மீகி வருணனை.


கம்பன் சோர்வு

இந்த முற்றுகையைக் கம்பன் மிகவும் சுருக்கமாக நான்கு பாடல்களில் வருணிக்கிறான். இந்த வருணனையில் கம்பனுடைய சிறப்பியல்பு ஒன்றுமே வெளிப்படவில்லை. சர்வ சாதாரணமான வருணனை தான் இது.

வானரப் படைகள் எழுப்பிய தூளி மிகுதியை வருணிக்கிறான் :

உளைப்புறும் ஒத
வேலை ஓங்கலை
ஒடுங்கத் தூர்ப்ப
அளப்பருந் தூளிச்
சுண்ணம் ஆசைகள்
அலைப்பப், பூசல்
இளைப்பருந் தலைவர்
முன்னம் ஏவலின்
எயிலை முற்றும்
வளைத்தனர், விடியத்
தத்தம் வாயில்கள்
தோறும் வந்து.

[உளைப்பு - ஒலித்தல். உறம் - பொருந்திய. ஒத வேலை - நீர்ப் பெருக்கையுடைய கடலின். ஓங்கு அலை ஒடுங்கத் தூர்ப்ப - ஓங்குகின்ற அலைகளின் ஒலியை ஒடுங்குமாறு உட்படுத்தும்படி. அளப்பருந் தூளிச் சுண்ணம் — அளக்க முடியாத புழுதிப் பொடி. ஆசைகள் அலைப்ப - திக்குகளை அலைக்க. பூசல் - போரில். இளைப்பருந் தலைவர் - இளைத்தல் இல்லாத வானரத் தலைவரின். முன்னம் ஏவலின் - முன்னம் ஏவிய ஏவலுக்கிணங்க. எயிலை முற்றும் வளைத்தனர் - மதிலை முற்றும் வளைத்துக் கொண்டார்கள்.]



சாதாரண உயர்வு நவிற்சிதான் இது. இப்படி வானர சேனைகள் மதிலைத் தழுவிப் பாய்ந்து ஆரவாரிக்கின்றனவாம். இந்த ஆரவாரமும்,

அந்தரக் குலமீன்
சிந்த, அண்டமும்
கிழிய ஆர்ப்ப

[அந்தரக் குலமீன் சிந்த - வானத்தில் தொகுதியாகவுள்ள நட்சத்திரங்களும் சிந்தும்படி. ஆர்ப்ப - ஆரவாரிக்க.] என்று வெகு சாதாரண உயர்வு நவிற்சியாகத் தான் வருணிக்கப் படுகிறது.

சுக்ரீவனும் லட்சுமணனும் குதூகலமாய் முன்பு செல்ல ராமன் கம்பீரமாக எழுந்து செல்வதும், சாதாரணமாகவே வருணிக்கப் படுகிறது!

செந்தனிச் சுடரோன்
சேயும் தம்பியும்
முன்பு செல்ல

இந்திரன் தொழுது
வாழ்த்த இராமனும்
எழுந்து சென்றான்.

[செந்தனிச் சுடரோன் சேய் — சூரிய குமாரனான சுக்ரீவன்.]

அரக்கர் சேனையை வானர சேனை வளைத்துக் கொண்டதை இரண்டு கவிகளில் வருணிக்கிறான் கம்பன். இதுவும் சர்வ சாதாரண வருணனைதான்.

அரக்கர் சேனையைக் குரங்குச் சேனை வலை போடுவது போல் சுற்றிக் கொள்கிறதாம்.

வலைகொலாம் என்னச்
சுற்றி வளைத்ததற்(கு)
உவமை கூறின்

என்று பீடிகை போட்டுக் கொண்டு வேறொரு உவமை சொல்வதிலும் கொஞ்சமும் குதூகலம் இல்லை நம் கவிஞனுக்கு.

மகுட பங்கத்திற்குப் பின் ராவணனுக்கு ஏற்பட்ட சோர்வு இந்தக் கவிஞனையும் பிடித்துப் பிடிக்கிறதோ என்றுதான் தோன்றுகிறது — அணிவகுப்புப் படலத்தின் இந்த இறுதிக் கட்டத்தைப் பார்க்கும்போது.

ஆனால் அடுத்த படலமாகிய அங்கதன் தூதில் கவிதா சன்னதம் வந்துவிடுகிறது, — வேவுகாரப் புலியான சார்த்தூலன் உள்ளது சொல்லிக் கோப மூட்டியதும் ராவணனுக்கு வீராவேசம் வந்து விட்ட மாதிரி.

* * *

ஆம், ராமன் அங்கதனைத் தூதனுப்புவது தான் அடுத்த நிகழ்ச்சி. விபீஷணனுடைய அனுமதியின் மேல் அங்கதனை ராமன் தூதனுப்புவதாகக் கூறுகிறார் வால்மீகி.

அங்கதனிடம் சொல்ல வேண்டிய செய்தியை ராமன் விவரமாகவும் காரசாரமாகவும் சொல்லி விடுகிறான். 'அடா, அரக்கப் பதரே! எவ்வித பலத்தின் மேல் நம்பிக்கை வைத்து நாம் இல்லாத வேளையில் சீதையைக் கவர்ந்து சென்றாயோ, அந்தப் பலத்தை இப்போது நம் முன்னே நின்று கொஞ்சம் காட்டி விடு' என்கிறான்.

அரக்கப் பூண்டே இல்லாமல் செய்து விடுவோம் என்கிறான். இனி விபீஷணன் தான் லங்கேச்வரன் என்றும் சொல்லி அனுப்புகிறான். 'உன் உத்தரக்கிரியைகளை இப்போதே செய்து முடித்துக் கொள்!' என்கிறான். படபடப்பாகவும் ஆத்திரமாகவும் பேசும் வீரப்பேச்சு இது.

வானர உருவுடன் செல்லும் நெருப்பைப் போல் எழுந்து செல்கிறானும் அங்கதன், ஒரு நொடியில் ராவணனுக்குச் சமீபத்தில் போய் இறங்கிவிடுகிறான்.

தன்னை இன்னானென்று தெரிவித்துக் கொண்டு, ராமன் சொன்ன செய்தியை 'ஒன்றும் விடாமல்,' 'ஒன்றும் அதிகம்இல்லாமல்' சொன்னான் என்பர் வால்மீகி.

உடனே அங்கதனை வதஞ் செய்யும்படி அரக்கர்கோன் கட்டளையிட நான்கு அரக்கர்கள் இவனைப் பற்றிக் கொள்கிறார்கள். அங்கதனோ ஆகாயத்தில் கிளம்பி அவர்களை உதறிக் கீழே தள்ளி விடுகிறான்.

ராவணனது மாளிகைச் சிகரத்தையும் இடித்துத் தள்ளிவிட்டு அங்கதன் திரும்பி விடுகிறான். ராவணன் பெருமூச்செறிகிறான், கடுங்கோபமும் கொள்கிறான் என்பது வால்மீகம்.

இப்படிச் சாதாரணமாக வால்மீகி கூறியுள்ள நிகழ்ச்சியிலிருந்து ஓர் இதிகாசத் துணுக்கை விசேஷ நாடகத் திறமையுடன் கம்பன் உருவாக்கிக் காட்டப் போகிறான்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

76. அங்கதன் குணாதிசயம்

வாலியின் அருமைப் பிள்ளையான அங்கதன் ராமனது விசேஷ நம்பிக்கைக்கு உரியவனாகி அனுமனைப் போல் தூது செல்லவும் உரிமை பெற்று விட்டானென்றால், அங்கத குணாதிசயம் எப்படி வளர்ந்து வந்திருக்கிறது என்பதை நாம் இச் சந்தர்ப்பத்தில் ஒருவாறு தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

‘ தந்தை சொல் மிக்க
மந்திரம் இல்லை ’

வாலி, மரணமடையும்போது சுக்கிரீவனை நோக்கி, ‘உன் மகனை அழைத்து வா’ என்றான். இனி மேல் அங்கதன் சுக்கிரீவனைச் சார்ந்திருக்க வேண்டியவன், சுக்கிரீவனது அன்பிற்கு உரியவனாகியிருக்க வேண்டியவன் என்பது குறிப்பு.

தன் தந்தை துன்ப நிலையில் இருக்கக்கூடும் என்பதை ஒரு போதும் அறியாதவன அங்கதன். உதிர வெள்ளத்திலே கிடந்த காதல் - தந்தையைப் பணிச் சென்று பார்த்து விட்டான். இம் மைந்தனுக்குத் தந்தை மீதுள்ள பாசம் உள்ளததிலே கடல் போலப் பொங்கி விட்டது.

‘ எந்தையே, நீ சிந்தையால், செய்கையால் எவருக்கும் ஒரு தீவினையும் செய்ததில்லையே !’ என்றான் அங்கதன். சுக்கிரீவனுக்கு வாலி செய்த தீவினையையும் அறியாதது போலல்லவா இப்படிச் சொல்லி விட்டான் ! அங்கதனுக்குத் தந்தை மீதுள்ள பக்தி இது.

இனி இந்த உத்தமப் புதல்வன் சுக்கிரீவனிடத்திலும் இப்படியே நடந்து கொள்ள வேண்டும் என்பது தான் வாலியின் விருப்பம் இப்போது.

சிவபெருமானுடைய திருவடி தவிர வேறு எதையும் அஞ்சலித் தறியாதவன் வீர வாலி என்பதும் அங்கதன் வாய் மொழி. இத்தகைய வாலி இந்த மைந்தனை நோக்கி, ‘அந்த நல்வினைப் பயனாகத் தான் நாயகனான ராமனால் எனக்கு இந்த மரணம் ஏற்படுகிறது !’ என்று பொருள்படச் சொன்னான் :

‘ நாயகன் இராமன்
செய்த நல்வினைப்
பயன் இது’ என்றான்

அங்கதன் தந்தையை,

பஞ்சின்மெல் அடியாள்
பாகன் பாதுகம்
அல்ல யாவும்
அஞ்சலித் தறியாச்
செங்கை ஆணையாய் !

என்று அழைத்தான்.

அந்தத் தந்தையோ, அந்தத் தவம் எனக்கு இந்த நற்கதியை விளைத்திருக்கிறது என்று பொருள்பட,

யான் தவம் உடைமை -
யால்இவ் இறுதிவந்(து)
இசைந்த(து); யார்க்கும்
சான்றென நின்ற
வீரன் நான்வந்து
வீடு தந்தான் !

என்று பதில் சொன்னான்.

இந்த வாலி வாக்கு அங்கதன் உள்ளத்திலே ஆழ்ந்து பதிந்திருக்க வேண்டும். தன் உயிருக்கு ராமன் இறுதி செய்தான் என்பதை மகன் கொஞ்சமும் எண்ணக் கூடாது என்றான். தனக்கு இசைந்த இறுதியாக வீடு-விடுதலை தந்தவனல்லவா!

வாலியின் இந்த வேதாந்த உரை அங்கதனுக்கு முதன் முதல் விளங்காத புதிராகத்தான் இருந்திருக்க வேண்டும். எனினும் மகன் ஏதோ ஒரு மந்திரம் போல் அதைத் தன் நெஞ்சிலே பதிய வைத்துக் கொண்டான் என்று கருதுவது தவறாகாது.

வாலிக்கு ஊனக் கண் மங்கி ஞானக் கண்ணல்லவா இப்போது பார்க்கத் தொடங்கி விட்டது!

மேலொரு பொருளும்
இல்லா மெய்ப்பொருள்
வில்லும் தாங்கிக்
கால்தரை தோய
நின்று கட்புலக்(கு)
உற்ற தம்மா!

[கட்புலக்கு – கட்புலனுக்கு.]
என்று அதிசயமாகத் தானே கண்டு காட்டினான்.

இந்த அதிசயக் காட்சியை அங்கதன் கண்டு கொண்டானென்று சொல்ல முடியாது. ஆனால் வாலியினுடைய இந்த உருக்கமான உரை அங்கதனுள்ளத்தை அவன் அறியாமலே பாதித்திருக்க வேண்டும்.

'எனக்குத்தான் இந்த மருந்தைக் கொண்டு வாழத் தெரியவில்லை. இப்போதாவது இதைக் கண்டு கொண்டதால் நல்ல கதி அடையப் போகிறேன். என் அருமைக் குழந்தையே, நீ இம்மருந்தைக் கொண்டு நல்வாழ்வு வாழவேணும் என்பது உன் தந்தையின் இறுதி ஆசை' என்றான் வாலி.

இவ்வளவு உணர்ச்சியும் பொருளும் உள்ளத்திலே ததும்ப, வாலியின் வாய் கட்டளையிட்டது.

மால்தரும் பிறவி
நோய்க்கு மருந்தென
வணங்கு மைந்த!

என்று.

'என்னுயிருக்கு இறுதி செய்தான் என்பதைச் சிறிதும் எண்ணாமல் உன் உயிருக்கு உறுதி செய்து கொள்வாய்' என்ற வாலி வார்த்தையும் அங்கதன் காதில் விழுந்தது.

மன்னுயிர்க்(கு) உறுதி
செய்வான் மலரடி
தொழுது வாழ்தி

என்ற புத்திமதியும் அங்கதன் காதில் விழுந்து விட்டது.

இப்படியெல்லாம் தன் இறுதிக் காலத்தில் வாலி சொன்ன உறுதிகள் அங்கதன் குணசித்திரத்தைப் புரட்சிமயமாக மாற்றி வளர்த்திருக்க வேண்டும்.

ராமனை நோக்கி, 'இந்த என் மைந்தன் உன் அடைக்கலப் பொருள்' என்றதும். அந்த மைந்தன் அடி தாழ்ந்ததும், ராமன்,

பொன்னுடை வாளை
நீட்டி, 'நீ இது
பொறுத்தி'

என்று சொன்னான்.

ராமன் நீட்டிய வாளை வாலி மைந்தன் பெற்றுக் கொண்டதும், அடைக்கலமும் பரஸ்பர நம்பிக்கையும் உறுதிப்பட்டு விட்டன. வாலிக்கு இனிமேல் ஒரு கவலையும் இல்லை. மனச் சமாதானத்துடன் உயிர் துறந்தான்.

ராமனுக்கு அரக்கர்களோடு ஏற்படும் போரில் அங்கதன் மனங் கலந்து பணி செய்ய வேண்டும் என்பதையும் வாலி வற்புறுத்தி விட்டான்.

இது நிகழ்ந்த கொஞ்ச நேரத்திலே வாலி சிறுவன் உண்மையாகவே பெரியவனாகி விட்டான்! வாலியின் இறுதிச் சொல் ஒரு மகா மந்திரம் போலவேயிருந்தது அங்கதனுக்கு எனக் கருதலாம்.

அனுமனும் அங்கதனும்

ராம சுக்கிரீவர்களின் விசேஷ நம்பிக்கைக்கு அங்கதன் உரிமையாகி விட்டான் என்பதற்கு, அங்கதன் தலைமையில் அனுமன் முதலான வானர வீரர்கள் தெற்கு நோக்கிச் சீதையைத் தேடப் புறப்பட்டதே தக்க சான்றாகும்.

அங்கதன் தலைமையில் தான் புறப்பட்டு வந்ததாக அனுமன் ராவணனிடம் தெரிவிக்கும் தோரணை அனுமனுக்கு அங்கதன் மீதுள்ள மதிப்பையும் விசுவாசத்தையும் புலப்படுத்துகிறது.

ராவணன் அனுமனை,

வாலிசேய் விடுத்த
தூத!

என்று அழைத்தான். அப்போது வாலியின் மரணச் செய்தியை ராமனது அநாயாச வெற்றியாக எடுத்துக் காட்டிய அனுமனுள்ளம், அங்கதனை ஆட்கொண்டதே ராமனது அதிசய வெற்றி என்று கருதியிருக்க வேண்டும்.

சுந்தரகாண்டத்தின் இறுதிப் படலத்திலே, இலங்கையிலிருந்து திரும்பி வந்த அனுமன், வாலியின் காதல்-மைந்தனை முதன் முதல் வணங்கியது, அந்தத் தலைமைப் பதவிக்காக மட்டும் செலுத்திய மரியாதையன்று; அங்கதனுடைய குணப் பெருமைக்கும் செலுத்திய மரியாதைதான்.



அங்கதனுக்கோ அனுமன்மீது அபார மதிப்பு எனக் கருதலாம். அனுமன் இலங்கைக்குச் சென்று சீதையைக் கண்டு திரும்பிய அந்த நிகழ்ச்சியே அங்கதனுள்ளத்தில் ஆச்சரியத்தையும் பெரு மதிப்பையும் விளைத்திருக்க வேண்டும்.

அனுமன் தான் அடைந்த வெற்றிகளைக் குறித்து ஒன்றுமே சொல்லாமல், 'சீதை க்ஷேமமாயிருக்கிறாள்' என்று அந்த உள்ளத்தின் அருந்தவத்தை மட்டும் தெரிவித்தது அங்கதனுள்ளத்தை அப்படியே வசீகரித்துவிட்டது என்று ஊகிக்கலாம்.

'சொல்லின் செல்வ'னுடைய வீரத்தைப்போல், அந்தப் பேச்சுத் திறனைப் போல், நாவடக்கமும் அங்கதனுக்கு ஒரு முன் மாதிரியாகத் தோன்றியது. 'அனுமனைப் போல் சிறியேனும் என்று தான் ராம கைங்கரியம் புரிய நேருமோ!' என்று இந்த உள்ளம் தவித்திருக்க வேண்டும்.

வாலி மகனாகிய தனக்கு அருள்செய்த ராம வீரம் விபீஷணனுக்கு விசேஷ அருள் புரிந்ததைக் கண்ணாரக் கண்ட நிலையில், ராமனது அபய தானம் எத்தகைய மாட்சி வாய்ந்தது, எவ்வளவு பொருள் பொதிந்தது என்பது முற்றும் புலனாயிருக்க

வேண்டும் அங்கதனுக்கு. அந்த விபீஷண சரணாகதிக்கு அனுமன் ஓர் அரும்பெருந் தூண்டுகோலாக உதவியதும், அங்கத னுக்கு அனுமன் மீதுள்ள மதிப்பை அதிகரிக்கச் செய்திருக்க வேண்டும்.

வளர்ச்சியின் சிகரம்

சேதுபந்தனம் முதலான ராம கைங் கரியங்களில் அங்கதனும் தனக்குரிய பங்கை மேற்கொண்டு செவ்வையாகச் செய்து முடித்தான் எனக் கருதலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் எல்லாம் அங்கதன் சுக்கிரீவனுக்கு உட்பட்டே தொண்டாற்றி வந்ததாகவும் ஊகிக்க லாம்.

ராமனுடைய ஒவ்வொரு செயலும் அங்கதனுடைய ராமபக்தியை வளர்த் திருக்க வேண்டும். எதிரியின் ஒற்றர்களை யும் மன்னித்தது போன்ற விசேஷமான அருட் செயல்கள், 'நமது தந்தை சொன்னபடியே இவன் தெய்வ வீரனா கத் தானிருக்க வேண்டும்' என்ற உணர்ச் சியை மேலும் மேலும் உறுதிப் படுத்தி யிருக்க வேண்டும்.

ராவணன் வானர சேனை காணும் போது இச் சேனையைச் சுட்டிக் காட்டிய சாரணன் ராவணனை நோக்கி, 'அதோ சுக்கிரீவனது பக்கத்திலிருப்பவன் வாலி மகன்' என்று தந்தையைப் பாராட்டியே மைந்தனை அறிவிக்கிறான். இதனால் சார ணன் அங்கதனுடைய சிறப்பியல்புகளைத் தெரிந்து கொண்டிருக்கவில்லை என்று கருதலாம். அவ்வளவு அடக்க ஒடுக்கமாக அங்கதன் தன் சிற்றப்பாவின் நிழலில் ஒதுங்கியிருந்தான் என்று ஊகிக்கலாம்.

சுக்கிரீவன் ராவணனை மகுடபங்கம் செய்து மீண்ட செயலும், 'நமக்கு வீரம் விளைக்க ஒரு காலம் வருமா? அது எப் போது வருமோ?' என்று அங்கதனைத் தவிக்கச் செய்திருக்க வேண்டும். தனக் கும் ஒரு வாய்ப்பு விரைவில் வரப் போகி றது என்பதை அங்கதன் எப்படி அறி வான்?

அணிவகுப்பு நடக்கிறது. வானர சேனை இலங்கையின் மதிலை வளைத்துக் கொள்கிறது; ஆரவாரம் செய்கிறது. சுக்கிரீவ லட்சுமணர் முன்னே செல்ல ராமனும் சென்று வடதிசை வாசலை அடைகிறான். இப்போது தான் அங்கத னுக்கு எதிர்பாராத அதிர்ஷ்டச் சீட்டு விழுகிறது.

ராவணனை மகுடபங்கம் செய்து வந்த சுக்கிரீவன் அனுமனை வாயாரப் புகழ்ந்து, தன் பணி அனுமன் பணிக்குக் கொஞ்ச மும் ஈடில்லை என்று கூறியது அங்கதன் காதில் ஒலித்துக் கொண்டே யிருக்கிறது.

> நூல்வலி காட்டும்
> சிந்தை நும்பெருந்
> தூதன்

என்று அனுமன் முன்னிலையிலே, எல்லா வானரர்களும் கேட்கவே சுக்கிரீவ மகா ராஜா குறிப்பிட்டதை மறக்க முடி யுமா?

அனுமனுடைய அதிசய ஆண்மை யான,

> வேல்வலி காட்டி
> னார்க்கும், வில்வலி
> காட்டி னார்க்கும்
> வால்வலி காட்டி

வந்த அந்த வீரத்தோடு ஒப்பிட்டுத் தன் வீரத்தை எப்படிப் பழித்துக் கொண் டான் சுக்கிரீவன்!

'இந்த என் சிற்றப்பாவின் சாகசம் கூட வாலி மகனாகிய எனக்குக் காட்டத் தெரியவில்லையே' என்று எண்ணிய அங் கதனுக்கு, அனுமன் காட்டிய அந்த 'வால் வலி' காட்டும் வாய்ப்பும் எதிர் பாராத நிலையில் கிடைத்து விடுகிறது.

அனுமனைத் தூதனாக அனுப்பியது போல் தன்னையும் தூதனாக ராமன் அனுப்பக் கூடும் என்பதை அங்கதன் எப்படி அறிவான்?

அனுமனுக்கு அடுத்தபடியாகத் தன்னை ராமன் மதித்திருக்கிறான் என்பதே அங்க தனுக்கு இனிமேல் தான் தெரியப் போகி றது. கிடைத்த இச் சந்தர்ப்பத்தை அங்கதன் எவ்வளவு சாமர்த்தியமாகப் பயன் படுத்திக் கொள்ளப் போகிறான்!

அனுமனைப் போல் அவ்வளவு கம்பீர மாக, அவ்வளவு சாதுரியமாக அங்கத னும் நடந்து கொள்ளப் போகிறான்! 'ராம தூதன்' என்று சொல்லிக் கொள் ளும் பெருமை — அனுமனுக்கே ஏக போகமாய்க் கிடைத்ததென்று கருதப் பட்ட அந்த உரிமை — அங்கதனுக்கும் கிடைக்கப் போகிறது. அதற்குரிய தகு தியை அங்கதன் தக்க முறையில் வெளி யிட்டுக் கொள்ளப் போகிறான்.

அனுமனுடைய சொற்சாதுரியமும் தனக்கு உண்டு என்பதையும் இந்த இளை ஞனான வீரன் வெளியிடப் போகிறான். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் வாக்குத் திறனையும் அனுமனிடம் கண் டதுபோல் அங்கதனிடத்திலும் காணப் போகிறோம்.

அங்கதன் தூது அங்கத குணாதிசய வளர்ச்சியின் சிகரமாகும்.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

77. வள்ளல் வந்தான்

கள்ளனைத் தேடி

எத்தனையோ வள்ளற் பெருமக்களைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறோம். 'வண்மைக்கு இவனே!' என்று மாபாரதம் சுட்டிக்காட்டும் கர்ணனின் கொடையை அறிந்திருக்கிறோம். விரும்பியவர்கள் விரும்பியவாறு பொருளை வாரி வழங்கினான்; புண்ணியத்தையும் வழங்கி விட்டான் இறுதிக்காலத்திலே!

நம் தமிழகத்திலும் பாரி, குமணன் முதலான வள்ளல்களின் புகழ், கதை கதையாக வழங்கி வருகிறதல்லவா? 'பாரியோடு மாரிதானே போட்டிபோட முடியும்!' என்ற அந்தக் கவிதைக் கண்ணாடியிலே பாரி வள்ளலையும் அவனால் உபசரிக்கப்பெற்ற புலவர் சிகாமணியையும் ஒருங்கே பார்த்துப் பரவசமாகிறோம்.

பொருட்கொடை நிலக் கொடைகளைப் போல் தலைக்கொடை கொடுக்கவும் துணிந்த குமணவள்ளலையும் கண்டு களிக்கிறோம் சங்கப் பாடல் வாயிலாக. குளிரால் நடுங்குகிறதென்று எண்ணி மயிலுக்குத் தன் போர்வையை உதவித் தான் குளிரால் நடுங்கிய வண்ணம் திரும்பினான் ஒரு வள்ளல் என்கிறோம். முல்லைக் கொடி படர வழியின்றி வருந்துவதா என்று தன் தேரை உதவித் தான் நடந்தான் ஒரு வள்ளல் என்கிறோம்.

கம்பனும் வள்ளன்மையும்

கம்பன் தனது ராமாயண முகப்பிலே வள்ளன்மையின் மூன்று முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுகிறான். வரையாது கொடுக்கும் வள்ளலும் நினைத்துப் பார்த்தே கொடுக்கிறானாம். உணர்ச்சி வசமாகி ஆத்திரமாய் ஒன்றும் செய்து விடவில்லை.

ஆனால் நினைத்துப் பார்ப்பதெல்லாம் தனக்காக ஏதாவது சேமித்து வைத்துக் கொண்டு கொடுக்க வேண்டுமே என்பதற்காக அல்ல. கொடுக்க இன்னும் என்ன இருக்கிறது, என்ன இருக்கிறது என்று ஞாபகப்படுத்திக்கொண்டு கொடுத்துக் கொண்டேயிருப்பதற்காகத்தான்!

வள்ளன்மையின் இரண்டாவது அம்சம், உள்ளவற்றையெல்லாம் கொடுத்து விடுவதுதான். 'நாளை நாம் கொடுப்பதற்காக வைத்துக்கொள்ள வேண்டாமா?' என்ற நினைவு வேண்டியதில்லையாம். எனவே, நினைத்துப் பார்க்கவும் தெரிய வேண்டும்; நினைத்துப் பாராமலிருக்கவும் தெரியவேண்டுமாம். மூன்றாவது அம்சம் அகமகிழ்ந்து முக மலர்ந்து கொடுப்பதாகும்.

இத்தகைய வள்ளன்மையை ராமராஜ்யத்திலே பார்க்க முடியாதென்றும் கம்பன் சொல்லி விடுகிறான். இங்கே 'வண்மைக்கு இவனே!' என்று ஒருவனைச் சுட்டிக்காட்டவும் முடியாது: 'உண்மைக்கு ஒருவன்' என்று சுட்டிக் காட்டவும் முடியாதாம்.

வள்ளல் ஒருவன் மழைபோல் வழங்குகிற அந்தக் கைக்குக் கீழே, எத்தனை கைகள் வறுமையின் கொடுமைக்குச் சான்றாக விரிகின்றன! எத்தனை எண் சாண் உடம்புகள் ஒரு சாணுக் குறுகி நிற்கின்றன! 'இந்த வள்ளன்மை எங்கள் ராமராஜ்யத்திலே இல்லை' என்று அந்த மகாராஜ்யத்தின் ஆஸ்தான மகா கவியே பாடியிருக்கும்போது அதன் உண்மை குறித்து நாம் ஐயங்கொள்ள வேண்டியதில்லை

ராமனே வள்ளல்

ராம ராஜ்யத்திலே வள்ளன்மைக்கு இடமில்லாவிட்டாலும், ராமனையே வள்ளல் என்று கம்பன் குறிப்பிடுவதுண்டு.



வனைந்தனைய திருமேனி
வள்ளல்

அதாவது, அழகைத் தொட்டுத் தொட்டு வனைந்தது போன்ற அந்த அழகுக் கொடை வள்ளலைப் பாருங்கள்!

சீதைக்கு 'மணம் இல்லை' என்ற குறை தீர அருளப் போகும் அந்த வள்ளலை ஆசை தீரக் கண்டு கவிஞன் நமக்கும் காட்டுகிறானல்லவா!

வள்ளல் மணத்தை
மகிழ்ந்தனன்

என்றுதானே ஜனக ராஜ சபையிலிருந்தவர்களும் பேசிக்கொண்டார்கள்!

கைகேயி பழைய வரங்களை அளிக்க வேண்டும் என்று கேட்டதும் அவள் கேட்கப் போவது என்ன என்பதைத் தெரிந்துகொள்ளாத நிலையில் தசரத சக்ரவர்த்தி, உள்ளம் உவந்து அளிப்பதாகச் சொல்லி அந்தச் சொல்லை உறுதிப்படுத்துவதற்காக,

வள்ளல் இ ராமன் உன்
மைந்தன் ஆணை

என்றானல்லவா!

இதே சக்கரவர்த்திதான், தான் ராமனுக்குக் கொடுத்த மாநில அரசையும் நிதிக் குவியல்களையும் இந்த மைந்தன் கைகேயிக்குக் கொடுத்து விட்டானே என்று வருந்தும்போது,

கள்ளக் கைகே-
சிக்கே உதவிப்
புகழ்கைக் கொண்ட

வள்ளல் — தனம்என்
உயிரை மாய்க்கும்!
மாய்க்கும்!

என்று புலம்புகிறான்.

'கள்ளக் கைகேசி' என்று ராஜ்யத்தைக் கவர்ந்துகொண்ட, கைகேயியைக் குறிப்பிடுவதும், அவளுக்கு ராஜ்யத்தைக் கொடுத்த அந்த வள்ளல்—தனம் தன் உயிரையே மாய்த்துவிடும் என்று கூறுவதும் மறக்க முடியாத தசரதப் பிரலாபமல்லவா!

இப்படியெல்லாம் நாட்டிலும் காட்டிலும் வண்மை பொழிந்த வள்ளல், தன் மனைவியைக் கவர்ந்த கள்ள அரக்கனுக்கும் தன் வள்ளல்—தனத்தால் உதவி செய்யக்கூடுமா என்று தான் இன்னும் ஆலோசித்துப் பார்க்கிறானாம்.

இதற்கு ஒரு வாய்ப்பாக 'அங்கதன் தூது' பயன் பட்டிருந்தால், இதையே ராவண வதத்தைக் காட்டிலும் சிறந்த வெற்றியாகக் கருதி மகிழ்ந்திருப்பான் என்பது குறிப்பு.

அதனால்தான் எழுபது வெள்ளம் சேனையுடன் விரைந்து வந்து முற்றுகை செய்து லங்கா பட்டணத்தின் வடக்கு வாசலிலே ராவணனுடைய வருகையை எதிர் பார்த்துக் கொண்டு நிற்கும் ராமனை 'வள்ளல்' என்கிறான் கவிஞன்; கள்ளனை வரவு நோக்கி நிற்கும் வள்ளல் என்கிறான்.

அருகில் நின்றுகொண்டிருக்கிறான் விபீஷணன். 'பளிச்சென்று என் உள்ளத்திலே ஓர் ஒளி, ஓர் உண்மை உதயமாகி

விட்டது' என்கிறான் வள்ளல் விபீஷணனை நோக்கி :

வள்ளலும் விரைவின்
எய்தி வடதிசை
வாயில் முற்றி
வெள்ளம்ஓர் எழு
பத்துக் கணித்தவெஞ்
சேனை யோடும்
கள்ளனை வரவு
நோக்கி நின்றனன்,
காண்கிலாதான்,
'ஒள்ளிய(து) உணர்ந்தேன்'
என்ன வீடணற்(கு)
உரைப்ப தானான்.

[வடதிசை வாயில்—வடக்கு வாசலிலே. முற்றி — முற்றுகை செய்து. வெள்ளம் ஓர் எழுபத்துக் கணித்த — எழுபது வெள்ளம் என்று கணக்கிடப்பட்ட. வெஞ்சேனையோடும் — கொடிய வானர சேனையோடும். நின்றனன் காண்கிலாதான் — நின்று அந்தக் கள்ளனைக் காணாதவனாய். ஒள்ளியது — உண்மையொளியோடு கூடிய ஒன்றை.]

வள்ளலின் உள்ளத்திலே தோன்றிய இந்த ஒளிதான் என்ன ! வள்ளல்—தனம் அல்லது வள்ளன்மைதானே உதித்திருக்க வேண்டும்! 'கள்ளக் கைகேசி'க்கும் உதவிய கருணை கள்ள ராவணனையும் தேடிப் பிடித்துக் காப்பாற்ற முடியுமா என்று தான் பார்க்கிறது.

ராவணனை வரவு நோக்கி நின்று பார்த்தும் அவன் வரக் காணாததால், ஒரு தூதுவனையாவது அனுப்பி வைப்போம் என்று உணர்த்துகிறது உள்ளொளி. இந்த உணர்வைத்தான் விபீஷணனுக்குத் தெரிவிக்கிறான் ராமன்.

விபீஷணனிடம் ராமன் 'ஒள்ளியது' என்றுதான் உணர்ந்த அந்தக் கருத்தை வெளியிடுகிறான் :

'தூதுவன் ஒருவன்
தன்னை இவ்வழி
விரைவில் தூண்டி
"மாதினை விடுதி
யோஎன்(று) உணர்த்தவே?"
மறுக்கு மாகில்,
காதுதல் கடன்என்(று)
உள்ளம் கருதிய(து);
அறனும் அஃதே;
நீதியும் அஃதே'
என்றான் கருணையின்
நிலயம் அன்னான்.

[விடுதியோ — விட்டு விடுவாயோ. காதுதல் — போர்செய்து வதைத்தல்.]

புத்திசாலியும் சாமர்த்தியசாலியுமாகிய ஒரு தூதுவன் வாயிலாக 'இப்போ



தாவது சீதையை விட்டு விடுவாயா?' என்று கேட்டுப் பார்க்கலாம் என்கிறான் ராமன். அப்போதும் ராவணன் மறுத்தானால் போர் செய்வதும் வதஞ் செய்வதும் கடமையாகும் என்கிறான்.

உலகத்திற்கு எவ்வளவோ இடுக்கண் விளைத்தான்; ராம பத்தினியைச் சிறைப்படுத்தி இருவருக்கும் பேரிடுக்கண் விளைத்தவன்தான்.

அப்பேர்ப்பட்ட மாபாவியை வதஞ் செய்வது கடமைதான். ஆனால் அதுதானா தருமம்? அதுதானா நீதி? அதுதானா கருணை? அது வெற்றியும் இல்லை யென்பது குறிப்பு.

'வனைந்தனைய திருமேனி வள்ளலி'ன் திருவுள்ளத்திலிருந்து பிறப்பதும் அழகாகத்தானே யிருக்கும்? ராமனுடைய வார்த்தையைக் கேட்ட விபீஷணன், 'அழகாயிருக்கிறது' என்றே பதில் சொல்லுகிறான்:

அரக்கர்கோன் அதனைக்
கேட்டான்; 'அழகிற்றே
ஆகும்' என்றான்.

[அழகிற்றே ஆகும்—அழகா யிருக்கிறது.]

ராமன் திருவுள்ளத்தின் அழகு மட்டுமா புலப்படுகிறது! விபீஷணனுடைய மறுமொழியில், இந்த அரக்கர்கோனது உள்ளத்தின் அழகும் தான் புலனாகிறது.

மூவருக்கும் ஒரு படம்

ராவணன் திருந்தக் கூடுமானால் ராம வள்ளலுக்கு அதுவே வெற்றி; விபீஷணனுக்கும் அன்றே அப்போதே வெற்றி!

ராமன் விபீஷணனுக்குத் தான் தன் உள்ளொளியின் ஒரு சுடராக வந்த ஆலோசனையை வெளியிட்டான். சிறிது தூரத்தில் சுக்கிரீவன் நின்று கொண்டிருந்தான். அவன் காதிலும் இந்தச் சம்பாஷணை விழுந்தது.

ராமன் சுக்ரீவனை நோக்கவே, இவனும் தன் கருத்தைத் தெரிவிக்கிறான்;

குரக்கினத்(து) இறைவன்
நின்றான், 'கொற்றவர்க்(கு)
உற்ற(து)' என்றான்.

[கொற்றவர்க்கு—அரசர்களுக்கு. உற்றது—இது பொருந்துவதே.]

இது ராஜதந்திரம், ராஜதர்மம் என்கிறான் சுக்கிரீவன். இதுவே தர்மம், அருள், அழகு என்ற கொள்கை ராமனுக்கும் விபீஷணனுக்குமே உடன்பாடு.

லட்சுமணனும் சிறிது தூரத்திலிருந்து இந்தச் சம்பாஷணையைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தான். ஆத்திரமாய்த் தன் கருத்தை வெளியிடுகிறான், அண்ணன் தன்னைக் கேட்பதற்கு முன்பே,

'இரக்கம்அ(து) இழுக்கம்'
என்றான் இளையவன்,
'இனி நாம் அம்பு
துரக்குவ தல்லால்
வேறோர் சொல்லுண்டோ?'
என்னச் சொன்னான்.

[இழுக்கம் தவறு; குற்றம். துரக்குவ தல்லால் — செலுத்துவதல்லாமல்.]

'தகாத இடத்தில் இரக்கம் காட்டுவது பெருந் தவறு' என்கிறான் லட்சுமணன். 'இனி நாம் அம்புதான் செலுத்த வேண்டும், அன்பு செலுத்துவதோ, தூது செலுத்துவதோ குற்றமாகும்' என்கிறான்.

லட்சுமணன் தன் கருத்தை இப்படிப் பொதுவாகக் கூறிவிட்டு நான்கு பாடல்களில் விளக்கி உரைக்கப் போகிறான். ராவணன் மீது ஒரு குற்றப் பத்திரிகையே படித்துவிடப் போகிறான்.

அப்பேர்ப்பட்ட குற்றவாளிக்கு 'என் மனைவியை விட்டுவிட்டால் அருள் புரிவேன்' என்று ராமன் செய்தி அனுப்புவது தவறு மட்டுமல்ல, ராமனுடைய சத்திய வாக்கையே கொலை செய்வதாகும் என்பது லட்சுமணனின் மனநிலை.

இதற்கு ராமன் பளிச்சென்று பதில் சொல்லி யிருக்கலாம். அழகழகாய்ச் சுடர்களை வாரி யிறைக்கும் உள்ளொளி படைத்தவனல்லவா!

ஆனால் லட்சுமணனுடைய கருத்தை நாம் இன்னும் விவரமாகத் தெரிந்து கொள்ளவில்லை; இனிமேல்தானே விளக்கமாகத் தெரிந்து கொள்ளப் போகிறோம்.

ராமன் தன் கருத்தை வெளியிட்டதும், 'அழகிது' என்றான் விபீஷணன். 'நல்லதொரு ராஜ தந்திரம்' என்றான் சுக்கிரீவன். 'சுத்தப் பிசகு' என்று ஆட்சேபிக்கத் துணிந்தான் லட்சுமணன்.

இம் மூன்று தம்பியரையும் ஒரு சேரப் படம் பிடித்துக் காட்டுவது போல் ஒரே பாட்டில் காட்டி யிருக்கும் கவி சாதுர்யம் இங்கே நினைத்து நினைத்து மகிழ்தற்கு உரியது.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ

78. சீற்றமும் புன்சிரிப்பும்

'கள்ளனோடு சமாதானமா! கூடாது, கூடாது. சாதாரணக் கள்ளனா?' என்று ஆத்திரம் பொங்கப் பேசுகிறான் தம்பி.

தேசியைச் சிறையில்
வைத்தான்

என்று தன் குற்றப் பத்திரிகையை வாசிக்கத் தொடங்குகிறான்.

நீண்ட குற்றப் பத்திரிகை

உலகத்திற்கே ஓர் ஒளி, ஓர் அழகு—உலகத்தின் சிகர ஜோதி— என்று போற்றும் பிராட்டியைக் களவாடிச் சிறையில் வைத்தானென்றால், அந்தக் களவு சாதாரணக் களவாகுமா ? இந்தக் களவு அவன் ஏற்கெனவே செய்திருக்கும் எத்தனையோ கள்ளச் செயல்களுக்கெல்லாம் சிகரமாக அமைந்திருக்கிறதாம்.

தேவர்களுடைய செல்வங்களையும் சுதந்திரத்தையும் களவாடி, அவர்களுடைய இமையாத கண்களையும் இடுங்கிப் போகுமாறு செய்து பழகியவன்தான் தேசியையும் வஞ்சித்துத் திருடியவன் என்கிறான். "தேசியைச் சிறையில் வைத்தான்" என்பதைத் தொடர்ந்து,

தேவருக்(கு) இடுக்கண்
செய்தான்.

என்ற குற்றச் சாட்டைப் பாருங்கள் !

'பூதேவர்கள்' என்று சொல்லத் தக்க முனிவர்களுடைய வாழ்க்கை-அமைதியையும் பறித்துக்கொண்டு துன்பத்தைக் கொடுத்தான். அந்த அந்தணர்கள் தங்கள் அந்தண்மையையும் தபோதனத்தையும் இழந்து பரிதவிக்கிறார்கள்.

பூசுரர்க்(கு) அலக்கண்
தந்தான்

[அலக்கண் – துன்பம் அடைவதற்கு இடமாக இருக்கும் உபத்திரவ நிலை.]

என்கிறான் தம்பி, தேவர்களைக் குறித்துப் பிரஸ்தாபித்ததுமே,

'படைத்தவன் படைத்த படைப்பெல்லாம் பட்சிக்கத்தான்!' என்பது ராவணன் மதம் என்கிறான் லட்சுமணன் :

மன்னுயிர் புடைத்துத்
தின்றான்.

[மன்னுயிர் – நிலைபெற்ற உயிர்களை. புடைத்து–அடித்து.]

கொடுங்கோலர்களெல்லாம், ஏழைகளைக் கசக்கிப் பிழிந்து இரத்தத்தை இரத்தினமாக்குவோரெல்லாம் 'மன்னுயிர் புடைத்துத் தின்'பவரே. ராவணனோ, நர மாம்ஸ பட்சணியுமானவன் என்பது கதை யல்லவா ?

ஆசையே அளவாகக் கொண்டு எல்லா உலகங்களிலும் ஏகபோக ஆட்சி செலுத்தக் கருதினானும். இக் கருத்துடன் தேவேந்திரனுடைய திருவையும் திருடிக் கொண்டானும் ;

இப்படியெல்லாம் செல்வம் சேர்ப்பது நேர்வழியில் சாத்தியமாகுமா ? வழி அல்லாத வழியிலேயே செல்பவனானன் என்பது லட்சுமணன் குற்றச்சாட்டு ;

ஆசையின் அளவும்
எல்லா உலகமும்
தானே ஆள்வான்
வாசவன் திருவும்
கொண்டான், வழியலா
வழிமேல் செல்வான்.

[ஆசை – திசை என்றும் பொருள் தரும். வாசவன் – இந்திரன். திரு – செல்வம்.]

தன்னுடைய செயல்களுக்கு ஆசை தவிர வேறொரு வரம்பில்லை என்பதை ராவணனே ஒப்புக்கொண்டிருக்கிறான்.

இச்சைக்(கு) ஏற்றன
யான்செய்த இத்தனை
காலம்

என்று விபீஷணனை நோக்கி 'மந்திரப் படல'த்தில் தெளிவாகச் சொல்லிவிட்டா னல்லவா ?

'வழியலா வழிமேல்' நடப்பவன் ராவ ணன் என்றால் 'வழியலா வழி மேல் ஓடி' யவர்கள் இவனுடைய பஞ்ச சேனபதி கள் என்பதைச் 'சுந்தர காண்ட'த் திலே தெரிந்து கொண்டிருக்கிறோம். இந்த எஜமானனுடைய திருப்திக்காக அப்படி ஓடி முன்னமே படுகுழியில் விழுந்து விட்டார்களல்லவா ?

இனி, லட்சுமணனுடைய இந்தக் 'குற் றப் பத்திரிகை'ப் பாட்டு முழுமையும் பார்ப்போம்;

தேசியைச் சிறையில்
வைத்தான்; தேவருக்(கு)
இடுக்கண் செய்தான்;

பூசுரர்க்(கு) அலக்கண்
ஈந்தான் ; மன்னுயிர்
புடைத்துத் தின்றான்;

ஆசையின் அளவும்
எல்லா உலகமும்
தானே ஆள்வான்,

வாசவன் திருவும்
கொண்டான்; வழியலா
வழிமேல் செல்வான்.

ஒரே பாட்டில் ஒரு நீண்ட குற்றப் பத்திரிகை !

மகா அலெக்ஸாந்தர் என்ற கிரேக்க வீரனைக் குறித்து வழங்கும் வரலாற்றுத் துணுக்குகளில் ஒன்று, அவன் ஆசை யையே எல்லையாகக் கொண்டு அகில லோக ஆட்சி செலுத்த விரும்பினன் என்பதைக் குறிப்பதாகும். தந்தை யாரின் வெற்றியைக் கேள்விப்பட்ட போது இளைஞனை அலெக்ஸாந்தர் மகிழ்ச்சியடைய வில்லையாம். 'நாடு களை யெல்லாம் அவரே வென்று விட்டால் நான் எந்த நாட்டைப் பிடித்து வெற்றி சூடுவது ?' என்று வருந்தினனும்.

இவ்வளவு பேராசையும் போரா சையும் கொண்டிருந்த இளைஞன், ஓர் இரவில் நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். 'வான வீதியிலே சிதறிக் கிடக்கும் வைர மணிகளோ !' என்று அதிசயிக்கவில்லை, ஒரு கவிஞ னைப் போல. உள்ளபடியே வைர மணிகளானல் அள்ளிக் கொள்ளும் ஆசை யுள்ளவன் தானே !

நட்சத்திரங்கள் கண் சிமிட்டி இரக சியம் பேசிக்கொண்டதை அறிந்து கொள்ளவும் முயலவில்லை இந்த மனோ பாவம். 'அந்த நட்சத்திர லோகங்களிலே என்று எங்கள் கொடியைப் பறக்க விடு வதோ !' என்று தான் கனவு கண்டானும் சிறுவனன அலெக்ஸாந்தர்.

சரித்திர அலெக்ஸாந்தரின் கனவு இதிகாச ராவணனுருக்கு நனவாகி விட் டது. திக்கோடு திக்கின் அந்தங்களிலும் ராட்சஸ ஏகாதிபத்தியக் கொடியைப் பறக்கவிட்டவன் இந்திரனுலகத்திலும் ஆதிக்கம் செலுத்தலானன் என்பது கவிஞர் வாக்கு.

சீதா தேவியைச் சிறையில் வைத்தது தானு, ராவணனுடைய குற்றம்? "இந்த அதர்ம சிகரத்தை எட்டுவதற்குமுன் எத்தனையோ அக்கிரமச் சிகரங்களை அடைந்து பழக்கமுற்றிருக்கிறான்" என் பது குற்றப் பத்திரிகையின் போக்கு.

பிராட்டியைச் சிறைவைத்த தொன்றே ராவணனது பெருங் குற் றம் என்று பேசும் ராமாயணப் பிரசங்கிகளும் உண்டு. இக்கருத்திற் குக் கம்பராமாயணத்தில் துளியும் ஆதாரம் இல்லை.



இருளும் ஞாலம்
இராவணனால்

[ஞாலம்—உலகம்]

—அதாவது, உலகத்தை இருளடையச் செய்தது ராவண ராஜ்யம் என்பது அனுமன் வாக்கு.

மக்களை ஹிம்ஸித்துச் செல்வம் எய்தியவன் ராவணன் என்றும், அடாநெறி பிடித்துச் சென்ற இவன் அறிஞர் சொற்களை அலட்சியம் செய்துவிட்டான் என்றும், ஸர்வ நாசம் எதிர்நோக்குகிறது என்பதை நினைத்துப் பார்க்கவேயில்லையென்றும், இவன் மெய்யில்லாதவன் என்றும் கம்பனே கவிக்கூற்றாகக் கூறியுள்ளான் சுந்தர காண்டத்திலே.

உலகப்பேரொளியாகிய பிராட்டியைத் திருடியதை வியாஜமாகக் கொண்டு உலகத்தையெல்லாம் இருளடையச் செய்து வந்த அரக்கர்கோனை ஒழித்தான் ராமன் என்பதுதான் ராமாயணத்தின் தேர்ந்த கருத்து. நீண்ட குற்றப் பத்திரிகை இக் கருத்தின் அகலவுரை தான்.

மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும் ஒருங்கே துயரம் விளைத்தான்; இச்சைக்கு ஏற்ற செயல்களையெல்லாம் கூசாது செய்து லோக பயங்கரனானான்; சாதுக்களை ஹிம்ஸித்தான்; பொதுமக்களைப் புடைத்தான். இவற்றுக்கெல்லாம் சிகரமாகச் சீதாதேவியைத் திருடிச் சிறை வைத்தான். இப்படியெல்லாம் விரிவாகக் குற்றம் சாட்டிய லட்சுமணன், அடுத்த பாட்டிலே பிராட்டியைத் தனிமை செய்த கொடுமையைத் தனியாக வற்புறுத்துகிறான்.

'மாயம் செய்து தேவியைப் பிரித்து அவனையும் உன்னையும் துயரத்தில் மூழ்கச் செய்தான்' என்று சொல்லி விட்டு, 'அவள் மீது இரக்கங்கொண்ட உன் தந்தை ஜடாயுவின் உயிரையும் கவர்ந்து விட்டான்' என்கிறான்.



இப்படிச் சொல்லி ராமனுடைய தர்மாவேசமாகிற கோபத்தை மூட்டிவிடப் பார்க்கிறான் லட்சுமணன்:

வாழியாய்! நின்னை
அன்று வரம்பறு
துயரின் வைகச்
சூழ்விலா மாயம்
செய்(து)உன்
தேவியைப்
பிரிவு செய்தான்;
ஏழையாள் இரக்கம்
நோக்கி ஒருதனி
இகல்மேல் சென்ற
ஊழிகாண் கிற்கும்
வாளுள் உந்தை
யை
உயிர்பண்(டு)
உண்டான்

[வாழியாய்—வாழ்வு பெற்றிருப்பவனே. வைக—(இங்கே) மூழ்க. சூழ்விலா—ஆலோசித்துப் பார்க்கவும் இயலாத கொடுமையுள்ள. மாயம்—(இங்கே) வஞ்சனைத் தொழில். ஏழையாள் இரக்கம்—சீதாபிராட்டியின் இரங்கத்தக்க. ஒருதனி—தன்னந்தனியே.

இகல்மேல் – போருக்கு, ஊழி காண்கிற்கும் – ஊழி அல்லது யுகாந்தத்தையும் காணவல்ல. உந்தையை -- உன் தந்தையாகிய ஜடாயுவை. உயிர் பண்டு உண்டான் – உயிரை முன்னே கவர்ந்தான்.]

'உன் மனைவியைக் கவர்ந்தான்; உன் தந்தையின் உயிரையும் கவர்ந்தான். அப்பேர்ப்பட்ட கள்ளனோடு சமாதானமா?' என்று கதறுகிறது லட்சுமணன் இருதயம்.

எனினும் ராமன் பேரருளாளன் என்பது தான் லட்சுமணனுக்கு நன்றாகத் தெரியுமே. மனைவியைக் கவர்ந்தவனையும் மன்னிக்கக் கூடியவன்தான் என்பதும், தந்தையைக் கொன்றவனும் சரணாகதி செய்து சமாதானம் செய்து கொள்ள முடியும் என்பதும் தம்பி லட்சுமணன் ஊகிக்கக் கூடிய விஷயங்களே. ஆனால் ராமன் தன் சத்திய வாக்கைக் கைவிடுவானா?—கைவிடத்தான் முடியுமா?

எனவே, 'இலங்கைச் செல்வம் நின்னதே' என்று விபீஷணனுக்கு வாக்களித்த அந்த வாய்மையை நினைவூட்டுகிறான் லட்சுமணன். அதற்கு முன்னமே தண்டகாரணிய வாசிகளான முனிவர்களுக்குச் சபதம் செய்து கொடுத்த அந்த வாக்கையும் நினைவூட்டுகிறான்:

அன்னவன் தனக்கு
மாதை விடில், உயிர்
அருளு வாயேல்,
'என்னுடை நாமம்
நிற்கும் அளவெலாம்
இலங்கை மூதூர்
மன்னவன் நீயே!'
என்று வந்தடைந் –
தவற்கு வாயால்
சொன்னசொல் என்னும்?
முன்னம் சூளுற(வு)
என்னும்? தோன்றல்!

[சூளுறவு – சபதம் செய்து கொடுத்தது. தோன்றல் – தோன்றலே; ஆண்களில் சிறந்தவனே.]

இலங்கைச் செல்வத்தை விபீஷணனுக்கு அளித்தது போல் அயோத்திச் செல்வத்தையும் அளித்துவிடக் கூடியவன் தான் அண்ணன். ராவணனுக்கே அளித்து விடக்கூடும் என்பது தான் லட்சுமணனுடைய ஊகத்திற்கு அப்பாற்பட்டதாகுமா!

தண்டகாரணிய வாசிகளுக்கு ராமன் வாக்களித்தது தான் என்ன! 'அந்தணர் தன்மையை மறந்த புல்லர் வலி தொலை'ப்பதாக உறுதி கூறினான். 'அறத்தினோடு அன்றி நின்றாரவர் வேரறுப்பென்' என்றும் உறுதி கூறினான். ராவணன் சமாதானத்தை விரும்பிச் சரணாகதனாகி விட்டால் அந்த நிலைமைதான் மாறிவிடக் கூடுமே!

'அந்தணர் தன்மையை மறந்த புல்லர்' முனிவர் தன்மையை உணர்ந்த நல்லோராகி விடக் கூடுமே! 'அறத்தினோடு அன்றி நின்றார்' அறத்தினோடு ஒன்றி நிற்பார்களே!

ஆனால் ராமன் அப்போது என்ன சொன்னான் என்பதை அப்படியே லட்சுமணன் நினைவில் வைத்துக்கொள்ளவில்லை, அந்த அபய வாக்கின் திட்டமான உருவத்தைச் சற்று மறந்து விட்டான் என்றே கருதலாம்.

லட்சுமணன் இப்போது ராமனை நோக்கி, 'அண்ணா, அந்த இரண்டு வாக்களிப்பு விஷயங்களையும் நீ அடியோடு மறந்து விட்டாயா? அப்படியானாலும்...' என்று தான் முடிவுரை கூறப்போகிறான்:

'அறம்தரு தவத்தை
ஆயும் அறிவினால்,
அவற்றை முற்றும்
மறந்தனை யெனினும்
மற்றிவ் இலங்கையின்
வளமை நோக்கி
இறந்திது போதல்
நீதென்(று) இரங்கினை
எனினும், எண்ணில்,
சிறந்தது போரே!'
என்றான்; சேவகன்
முறுவல் செய்தான்.

ராமன் முறுவல் செய்கிறான். இம்முறுவலின் பொருள்தான் என்ன?

'இரக்கம்அ(து) இழுக்கம்'
என்றான் இளையவன்
'இனி நாம் அம்பு
துரக்குவ தல்லால்
வேறோர் சொல்லுண்டோ?'

என்ற லட்சுமணன் கொள்கையுடன்.

'புயத்(து)உறை வலிய—
ரேனும் பொறையொடும்
பொருந்தி வாழ்தல்
சயத்துறை; அறனும்
அஃதே'

என்ற ராமன் கொள்கையை ஒப்பிட்டுப் பாருங்கள்.



79. தூதன் புறப்படுகிறான்

தண்டகாரணிய வாசிகளுக்கும் விபீஷணனுக்கும் வாக்களித்ததை ஞாபகப்படுத்திக் காட்டிய லட்சுமணன், 'அந்த விஷயங்களை மறந்து விட்டாயென்றாலும் போரே சிறந்தது' என்று கூறி முடித்தானல்லவா? அண்ணன் தன் தரும புத்தியினால் தன் வாக்கையே அடியோடு மறந்து விடவும் கூடும் என்பது தம்பியின் கருத்து.

அதற்குப் பதில் சொல்லும் ராமன், 'அந்த மறதி எனக்கு இல்லை!' என்கிறான். வாக்களிப்பை மட்டுமா?'—அரக்கன் செய்த தீச் செயல்களையும் மறந்து விடவில்லை என்கிறான்.

'எல்லாம் ஞாபகம் தான்; முடிவாக நடக்கப் போவதும் நீ சொன்ன அந்தப் போர் தான்' என்றும் சொல்லுகிறான்.

ராஜ நீதியும் ராஜ தந்திரமும்

இப்படிச் சொன்ன பின்பும், நீதி வழியை விட்டு விலகுவது நன்றல்ல என்கிறான்:

அயர்த்திலன் ; முடிவும்
அஃதே ; ஆயினும்
அறிஞர் ஆய்ந்த

நயத்துறை நூலின்
நீதி நாம்துறந்(து)
அமைதல் நன்றோ ?

[அயர்த்திலன் – மறந்தேனில்லை.]

'இரக்கம் தவறாகப் போய்விடுவதும் உண்டு' என்ற லட்சுமணனுடைய சொல்லுக்கு விடையாக, பொறுமை இன்றியமையாதது என்பதை வற்புறுத்துகிறான் ராமன். 'இனிமேல் அம்புதான் செலுத்தப் படவேண்டும்' என்றானல்லவா லட்சுமணன்? அதற்கு விடையாக, 'எத்தகைய வலிமையும் பொறுமையோடு பொருந்தித் தான் வெற்றி பெற வேண்டும்' என்கிறான்.

இதற்கு மேல் ராமன் பேச்சை வளர்க்க விரும்பவில்லை. உடனே செயலில் ஈடுபட விரும்பி விபீஷணன் முதலியோரிடம் 'யாரைத் தூதனுப்பலாம்!' என்பது குறித்துப் பேசுகிறான்.

இது குறித்து அவர்களுடைய ஆலோசனையைக் கேட்கவில்லை; தன் ஆலோசனையையே அவர்களுக்குத் தெரிவிக்கிறான்.

தூதன் என்றதுமே ஒரே எண்ணம் தான் முற்பட்டுத் தோன்றுகிறது. ராம தூதன் என்றால் வேறு யாராக இருக்க முடியும்?— ராம பக்தன் என்று சிறப்பித்துச் சொல்லத்தக்க அனுமனைத் தானே யிருக்கமுடியும்?

ஆனால் மறுபடியும் அனுமனை அனுப்பி வைப்பது ராஜ தந்திரமல்ல என்பது ராமன் கருத்து:

மாருதி பின்னும்
செல்லின், மற்றிவன்
அன்றி வந்து

சாருநர் வலியோர்
இல்லை என்பது
சாரு மன்றே !

[மாருதி – அனுமன். மற்றிவன் – மற்று இவன்; இந்த அனுமன். சாருநர் வலியோர் — சார்வதற்கு வேண்டிய வலிமை படைத்தவர்கள். சாரும் அன்றே—எதிரிகளுக்கு உண்டாகுமல்லவா.]

அனுமனை மீண்டும் அனுப்புவது ராஜ தந்திரமாகாது என்று சொல்லிக் கொண்டே ராமன்,

ஆர் இனி ஏகத்
தக்கார்?

என்ற கேள்வியை எழுப்புகிறான்.

இந்தக் கேள்விக்கும் சுக்கிரீவன் முதலானவர்களிடமிருந்து விடையையோ, ஆலோசனையையோ எதிர்பார்க்கவில்லை. வினாவை எழுப்பியதுபோல் விடையையும் தானே உதவிய வண்ணம்,

அங்கதன் அமையும்

[அமையும் – தகுதியானவன்தான்.]

என்று தீர்மானித்து விடுகிறான் ராமன்.

அனுமனைப் போல் அவ்வளவு சாமர்த்தியமாக அங்கதன் நடந்துகொள்ள முடியும் என்று ராமன் எதிர் பார்க்கவில்லை. சத்துருக்கள் வீரம் விளைத்தபோதிலும் தன்னைக் காப்பாற்றிக்கொண்டு மீண்டு வரக் கூடியவன் என்ற அளவிற்குத்தான் அங்கதன் மதிக்கப்படுகிறான்.

அங்கதனிடம் ராமன் இப்படிச் சொல்லவில்லை. விபீஷணனையும் சுக்கிரீவனையும் நோக்கித்தான்,

மாருதி பின்னும்
செல்லின் மற்றிவன்
அன்றி வந்து

சாருநர் வலியோர்
இல்லை என்பது
சாரு மன்றே!

ஆரினி ஏகத்
தக்கார்? அங்கதன்
அமையும்; ஒன்னார்

வீரமே விளைப்ப
ரேனும் தீதின்றி
மீள வல்லான்.

[ஒன்னார் – பகைவர்.]

என்று ராமன் சொல்லுகிறான்.

அவர்கள் கேட்க இப்படி உரக்கச் சிந்திக்கிறான் என்று கருதுவது பெரிதும் பொருந்துவதாகும்.

ராமனும் புதிய தூதனும்

ஆனால் இந்த வார்த்தை அங்கதன் காதிலும் விழுந்து விடுகிறது. அவன் சமீபத்திலேதான் நின்று கொண்டிருந்தான். 'நல்லது' என்று விபீஷண சுக்கிரீவர்கள் ஒப்புக்கொண்டது தான் தாமதம், ராமன் தானே அங்கதனைக் கூப்பிடுகிறான்.

'அங்கதா!' என்றோ, 'வாலி மகனே!' என்றோ கூப்பிடவில்லை. 'நம்பி!' என்று அழைக்கிறான். விரும்புதற்குரிய குணங்களைப் பூர்ணமாக உடையவன் என்பது இச் சொல்லின் பொருள். இந்த அழைப்பிலேயே தழைக்கிறது நம்பிக்கை நிறைந்த உவகை அங்கதன் உள்ளத்திலே.

'நீ எதிரிகளிடம் போய் ஒரு செய்தி சொல்லிவிட்டு வரவேணும்' என்று ராமன் கூறவே, அங்கதனுள்ளமும் உடம்பும் ஒருங்கே பூரித்துப் போகின்றனவாம்:

நன்றென, அவனைக்
கூவி, 'நம்பி நீ
நண்ண லார்பால்

சென்றுள துணர
ஒன்று செப்பினை
திரிதி' என்றான்;

அன்றவன் அருளப்
பெற்ற ஆண்தகை
அலங்கற் பொற்றோள்

குன்றினும் உயர்ந்த
தென்றால், மனநிலை
கூற லாமோ?

[நன்றென – நன்று என; நன்று என்று அவர்கள் சொல்ல, நண்ணலார் பால் – பகைவரிடம். உளது உணர – உள்ளதை அவர்கள் உணருமாறு. செப்பினை திரிதி – சொல்லித் திரும்பி வருவாய். அன்று – அப்போது, அவன் அருளப் பெற்ற – ராமனால் அருளோடு கட்டளை



யிடப்பெற்ற, ஆண்தகை – ஆண்மைக் குணமுள்ள அங்கதனுடைய, அலங்கல் பொற்றோள் – மாலை யணிந்த அழகிய தோள்கள்.]

ராமனால் அருளப் பெற்றதுமே அங்கதன் ‘ஆண்தகை’ யாகி விடுகிறான், ஆண்தகையே தூதுவனாகச் செல்வதற்கு உரியவன் என்பது குறிப்பு,

மாலையும் கழுத்துமாக வந்து நிற்கிறான் அங்கதன். நாம் இந்நாளில் சட்டையால் உடம்பை மறைத்து உத்தரீயம் முதலியவற்றால் அணி செய்துகொள்வது போல், அந்நாளில் பரந்த மார்பையும் வீரத் தோள்களையும் மறைத்துக் கொள்ளாமல் பூமாலைகளால் அணி செய்து கொள்வது வழக்கமல்லவா?

ராமனால் அருளப்பெற்ற ஆண்தகையின் மாலை இப்போது வெற்றி மாலையாகக் காண்கிறது, அங்கதன் கண்ணுக்கு மட்டுமல்ல; மற்ற வானர வீரர்களின் கண்களுக்கும் தான்.

நம் கவிஞனுடைய கண்ணுக்கும் அப்படியே தோன்றுவதால்,

ஆண் தகை அலங்கல்

என்று அந்த மாலை ஆண்தகைக்கு இசைந்திருப்பதை ‘இதோ பாருங்கள்’ என்று சுட்டிக் காட்டுகிறது கவிக்கூற்று.

ராமனால் அருளப்பெற்ற ஆண்தகையின் வெற்றி மாலை கிடக்கும் வீரத் தோளைப் ‘பொற்றோள்’ என்று சுட்டிக் காட்டி அந்த வீர சுந்தர மாட்சியிலே தானும் பூரித்துப் போகிறான் கவிஞன்.

இந்தப் பூரிப்பேதான்,

அன்றவன் அருளப்
பெற்ற ஆண்தகை
அலங்கற் பொற்றோள்

என்று பொங்கி வருகிறது.

இப்படி நம் கண்முன் அங்கதனைக் கொண்டு வந்து நிறுத்தும் கவிஞன் உடனே எவ்வளவு இரத்தினச் சுருக்கமாகப் பேச வைக்கிறான்!

காரியம் எவ்வளவு துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதை நன்குணர்ந்த அங்கதன், ‘அவனுக்கு என்ன சொல்ல வேணும்?’ என்று பீடிகை யில்லாமல் கேட்டு விடுகிறான்.

அந்தக் கேள்வியும் ராமன் விடையும், வேகத்திலும் அழுத்தத்திலும் ஒன்றோடொன்று போட்டியிடுவது போலக் காண்கின்றன:

‘என் அவற்(கு) உரைப்ப(து)!’
என்ன, ‘ஏந்திழை-
யாளை விட்டுத்

தன்னுயிர் பெறுகை
நன்றோ? அன்றெனில்
தலைகள் பத்தும்



சின்னபின் னங்கள்
செய்யச் செருக்களம்
சேர்தல் நன்றோ?

சொன்னவை இரண்டின்
ஒன்றே துணிகெனச்
சொல்லி டென்ருன்.

[என் – என்ன. அவற்கு – அந்த ராவண னுக்கு. ஏந்திழையாள் – சீதாதேவி, செருக்களம் – போர்க்களம். துணிகென – துணிக என; துணிந்து சொல்வாயாக என்று.]

ராமன் சொல்லி முடித்து விட்டது போலவே தோன்றுகிறதல்லவா! எனினும் மறுபடியும் பேசத் தொடங்கி மேலும் அழுத்தமும் வேகமும் கொடுக்கிருன் தன் வார்த்தைக்கு:

'அறத்துறை அன்று,
வீரர்க்(கு) அழகும்அன்(று),
ஆண்மை அன்று,

மறத்துறை அன்று
சேமம் மறைந்துறைந்(து)
ஒதுங்கி வாழ்தல்;

நிறத்துற வாளி
கோத்து நேர்வந்து
நிற்கு மாகில்

புறத்துற எதிரே
வந்து போர்தரப்
புகறி' என்ருன்.

[மறத் துறை அன்று – வீரகுணத்துக்குத் தக்க துறையும் ஆகாது. நிறத்து உற – மார்பிலே அழுந்துமாறு. வாளி – அம்புகளை. புறத்து உற – நகருக்கு வெளியே பொருந்த. புகறி – புகல்வாய்; சொல்வாய்.]

ராமனுடைய உள்ளம் ஏற்கெனவே அங்கதனுக்குத் தெரியாததல்ல. எனினும் தூதுபோன இடத்தில் தான் எப்படி நடந்துகொள்ள வேண்டும்—விநயமாகவா வீரமாகவா? இதை நன்கு தெரிந்துகொள்ள வேண்டுமென்றுதான் 'என்ன அவனுக்குச் சொல்வது?' என்று கேட்டுப் பார்த்தான் அங்கதன். இப்போது ராமன் சொன்னதிலிருந்து, தான் மேற்கொள்வதற்கு உரிய ஒரு திட்டமே உருவாகி விடுகிறது அங்கதன் மனக்கண் முன்பு.

'புனியா ஓவியமா'கத்தான் இருக்கிறது திட்டம். இந்த வரிப்படத்திற்கு நிறம் கொடுத்து உயிர் கொடுப்பதற்குத் தான் அவகாசம் இருக்கிறதே! அந்த வேலையை ராமன் அருள் பெற்ற இவனுள்ளமே பூர்த்தி செய்துவிடும் என்பதில் இவனுக்குச் சந்தேகமே இல்லை.

புறப்பாடு

இனிமேல் புறப்பட வேண்டியது தானே? அங்கதன் புறப்பாடு வெகு ரஸமாய் அதிஉசிதமாய் ஒரே பாட்டில் ஒரு முழுக் கம்ப சித்திரமாக அமைந்திருக்கிறது. பார்த்துப் பார்த்து அதிசயிக்கத் தக்கது; இன்புறத் தக்கது.

ராமன் பேசி முடித்ததும் வணங்கிப் புறப்படுகிருன் அங்கதன்.

பார்மிசை வணங்கி

[பார்மிசை – நிலத்தின் மீது.]

என்று தொடங்குகிறது கவி.

தரையோடு தரையாக விழுந்து தொழுது கிடக்கிருன் ஒரு கணம், 'என்ன பெரும் பணிவு!' என்ற வியப்புடன், 'இனி என்ன செய்யப் போகிருன்' என்று கவனிக்கிருேம்.

அடுத்த கணமே சிங்கம் போல் கம்பீரமாய்க் கிளம்பிவிடுகிருன். பணிவிலிருந்து கிளம்பும் இந்தக் காம்பீர்யத்தை, நீறு பூத்த நிலையிலிருந்து ஜொலித்துப் படரும் நெருப்பைக் காட்டுவது போலவும், வெறும் குகையாக இருண்டு கிடந்த பிரதேசத்திலிருந்து பளிச்சென்று பாயும் சிங்கத்தைக் காட்டுவது போலவும் காட்டுகிறது கவிதை.

முன்ருவது க்ஷணத்தில் சிங்கம் மறைந்து, 'ராமபாணம் தான் கிளம்பிவிட்டதோ? ராமன் தான் வில்லை வளைத்ததும் பிறருக்குப் புலப்படாதவாறு அவ்வளவு வேகத்திலே அம்பு தொடுத்து விட்டானே!' என்ற பிரமை ஏற்படுகிறது.

அப்படிப் பாய்ந்து படர்ந்து அவ்வளவு விசையில் போகிருன் அங்கதன்:

பார்மிசை வணங்கிச்
சீயம் விண்மிசைப்
படர்வ தே போல்

வீரன்வெஞ் சிலையிற்
கோத்த அம்பென
விசையிற் போனுன்.

[சீயம்—சிங்கம்.]

ஓதி ஓதி உணர உணர, அங்கதன் பாய்ந்துபோகும் அதிசயம் அப்படியே கட் புலனுகி விடுகிறது. இந்த முழுச் சித்திரத்தையும் அடுத்த வாரம் காண்போம்.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

80. ஒரே பாய்ச்சல்

போர் தொடங்க வேண்டிய சந்தர்ப்பத்தில் தூது அனுப்புவது ராஜ தந்திரம் என்று கருதினன் சுக்கிரீவன். அருளின் செயல் என்று நம்பினன் விபீஷணன். தவருன செயல் என்ருன் லட்சுமணன்.

தருமமா, தந்திரமா?

'**மூ**ன்று தம்பியர் அபிப்பிராயங்களையும் அறிந்து கொண்ட பின் ராமன், இன்னும் அனுமனை அனுப்புவது ராஜ தந்திர மன்று என்று சொல்லி, மேலே நடக்க வேண்டிய காரியத்திலே அவர்கள் கவனத்தைத் திருப்பினன்.

தரும உணர்ச்சிக்கும் ராஜ தந்திரத்திற்கும் முரண்பாடு இருக்க வேண்டிய அவசியமில்லை யென்பது ராமனுள்ளம். ஆனல்,

ஆர் இனி ஏகத்
தக்கார்? அங்கதன்
அமையும்

என்று கூறியதிலும் ராஜதந்திரம் இடம் பெற்றிருக்கிறதா என்பது ஒரு கேள்வி.

மகா யுத்தம் நெருங்கிவிட்டது; ஏறக்குறைய ஆரம்பமாகிவிட்டது என்றே சொல்லவேண்டும். இந்த நிலையில் அங்கதன் தூது வாலி மகனுக்கு ஒரு பரீட்சையாகவும் இருக்கக்கூடுமா!

அங்கதனைக் கூவி, 'நம்பி!' என்று விளித்துத் தன் விசேஷ நம்பிக்கை தோன்றப் பேசுகிருனே ராமன், அதுவும் ராஜதந்திரமா! அங்கதன் மன நிலையை ஏற்கெனவே தெளிவாகத் தெரிந்து கொள்ள வில்லையா!

அங்கதனுடைய தொண்டு நிலையைக் கவிஞன்,

வீரன்வெஞ் சிலையிற்
கோத்த அம்பென
விசையிற் போனன்

என்ற வருணனையில் குறிப்பாக வெளியிடுவதாய்க் கருதலாம்.

ராம பாணம் போலப் புறப்பட்டானென்ருல், அங்கதன் தனக்குத் தனி விருப்பு வெறுப்புக்கள் இல்லாமலே புறப்பட்டான் எனக் கருதலாமல்லவா! ராம பாணத்தின் விசை முழுவதும் ராமன் முடுக்கும் விசை தானே.

தன் கருவியாகவே அங்கதன் நடந்து கொள்ளப் போகிருன் என்பது ராமன் அறியாததா! இது இருக்கட்டும்; மேலே செல்வோம்.

அங்கத ரகஸ்யம்

பார் மிசை, வணங்கினன்; விண் மிசை விரைந்தான். சிங்கம் பாய்ந்து படர்வது போலச் சென்ருன்; போகும் வேகம் அதிகரிக்கவே ராம பாணம் போலாகி விடுகிருன்.

கோதண்டம் உதைத்த சரம் போல ஜொலித்துக்கொண்டு போகிருன் அங்கதன் என்ற குறிப்பும் இந்த வருணனையில் காணப்படுகிறது. இந்த ஜொலிப்பு ராவண சபையில் விசிறி மேலும் 'ஜ்வாலை' செய்யப் படுவதைக் காண்போம்.

ஒரு கணம் வணக்க நிலையிலும், மறு கணம் வீர காம்பீர்ய நிலையிலும், மூன்ருவது கணத்தில் நேர்மையாக ஜொலித்துச் செல்லும் வேக நிலையிலும் அங்கதனைக் காட்டிய கவிஞன், இதே பாட்டின் பிற்பகுதியில் அங்கதனை இவ்விதமாக உத்ஸாகப்படுத்தியிருக்கும் இரகசியத்தை வெளியிடுகிருன்:

'மாருதி அல்ல
　　னாகில் நீ எனும்
　　மாற்றம் பெற்றேன்!
யார்இனி என்னோ(டு)
　　ஒப்பார்?' என்பதோர்
　　இன்ப முற்றான்.

[மாருதி – அனுமன்.]

எத்தகைய ராஜ பக்தி விசுவாசம் கொண்டிருக்கிறான் வாலிமகன் ராம னிடம்! ராமன் வாயால்

மாருதி அல்ல
　　னாகில் நீ

என்ற வார்த்தை பெற்றதே அங்கதனுக்குத் தனிப் பெரும்பேறாகத் தோன்று கிறது.

அனுமன் மீது அங்கதனுக்குள்ள பெரு மதிப்பும் இங்கே நன்கு புலனாகிறதல்லவா!

'அனுமனுக்கு அடுத்த ஸ்தானத்தில் ராமன் என்னைத் தூக்கி வைத்து விட்டானே!' என்ற இந்த நினைவே, இந்த இன்பமே, இந்த விசையில் இவனை அநாயாசமாகச் செலுத்திக் கொண்டு போகிறதாம்.

தலைமைக்குரிய பண்பு

பெருந் தலைமைப் பதவிக்கு உரிய முக்கியமான ஒரு பண்பு இப்படி அங்கதனைப் போன்றவர்களையும் வசீகரித்துப் பணிகொள்வதாகும். இத்தகைய பண்பு இயற்கையிலேயே சிலரிடம் அமைந்திருக்கிறதென்றும், அவர்களைப் 'பிறவித் தலைவர்கள்' எனக் கருதலாமென்றும் கூறுவதுண்டு.

பெருந்தலைமைப் பதவிக்குரிய இத்தகைய வசீகர சக்தி தர்ம வீரர்களான ராமனைப் போன்றவர்களிடம் தான் காணப்படுகிறது என்பதில்லை. நெப்போலியன், மகா அலெக்ஸாந்தர் முதலான பேராசைக்காரர்களிடத்திலும் காணப்பட்டது; லோக பயங்கரர்களான தாமர்லேன் முதலான தலைவர்களிடத்திலும் காணப்பட்டது. இது சரித்திரப் பிரசித்தமான செய்தி.

இத்தகைய வசீகர சக்தி அரக்கர் கோனும் அகிலலோக பயங்கரனுமான ராவணனிடத்திலும் காணப்பட்டது என்பதைக் கவிஞன் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் காட்டியுள்ளான். இந்த வசீகர சக்தி இல்லாவிட்டால் ராவணன் ஏவ அரக்கர்களும் அரக்கர் தலைவர்களும் கூட்டங் கூட்டமாய்த் தங்களைப் பலி கொடுத்திருப்பார்களா?

ஒரு வெளிப்படையான உதாரணம் காண்போம். சுந்தர காண்டத்திலே சம்புமாலி என்ற குதிரைப்படைத் தலைவனைப் பார்த்து ராவணன், 'நீ நமது குதிரைப் படைகளோடு போய்க் குரங்கை வளைத்துக்கொண்டு அதன் ஆற்றலை ஒடுக்கிக் கட்டிப் பிடித்து இங்கே கொண்டு வரவேணும்; ஞாபமாகக் கயிறு கொண்டு போ; அந்தக் குரங்கைக் கட்டிக்கொண்டு வந்து என்னிடம் தந்து என் மனச் சினத்தைத் தணிப்பாய்' என்று கட்டளையிட்டான்.

உடனே அந்தச் சினம் அந்த மனத்திலிருந்து வெளிப்பட்டுக் குதித்து ஓர் உருக்கொண்டு குதிரைமேல் தாவி ஏறிப் போவது போலப் போனானும் சம்புமாலி. அங்கதனைப்போல் வணங்கிப் போனான்.

அந்தக் குதூகலத்தின் இரகசியம் பின் வருமாறு வெளியிடப்பட்டது:

'நீஇது முடித்தி
　　என்று நேர்ந்தனை
　　நினைவின் எண்ணி
ஏயினை என்னப்
　　பெற்றால் என்னின்யார்
　　உயர்ந்தார்?' என்னாப்
போயினன் இலங்கை
　　வேந்தன் போர்ச்சினம்
　　போவ தொப்பான்.

[ஏயினை – ஏவினை.]

இந்தச் சம்புமாலியின் மன நிலையையும் போக்கையும்,

மாருதி அல்ல
　　னாகில் நீஎனும்
　　மாற்றம் பெற்றேன்,
யார்இனி என்னோ(டு)
　　ஒப்பார் என்பதோர்
　　இன்ப முற்றான்

என்ற அங்கதன் மனப்போக்குடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

ராவணனுடைய போர்ச்சினம் போலச் சென்ற சம்புமாலியும் ராமனது தர்மாவேசம் போலச் சென்ற அங்கதனும் எத்தகைய இன்ப உணர்ச்சியுடன் தங்கள் பெரும் பொறுப்பை மேற்கொண்டு ஒழுகுவாராயினர்.

காதலனுக்குக் காதலியும், காதலிக்குக் காதலனும் எத்தகைய வசீகர சக்தியை வெளியிடுகிறார்களோ அத்தகைய வசீகரப் பேராற்றலைப் பிறவிப் பெருந்தலைவனும் தன்னைச் சார்ந்தவரிடம் வெளியிடுகிறானென்று கூறுவதுண்டு. எனவே தான்

எத்தகைய தியாகமும் இன்பவெறியுடன் மேற்கொள்ளப் படுகிறது என்பர்.

ராமனைச் சார்ந்தவர்களெல்லாம் ராமனைக் காதலிக்கிருர்கள் என்றே சொல்லவாம். நாட்டிலும் இப்படி: காட்டிலும் இப்படி.

முனிவர்களின் காதலையும் மிஞ்சி விடுகிறது குகன் ராமன் மீது கொண்ட நட்புக் காதல், ராமனுக்காகக் குகனே உயிர்த் தியாகம் செய்யவும் விரும்பினுன்.

அனுமன் முதலானவர்களும் ராமனுடைய ரூப சௌந்தரியத்திலும் குண சௌந்தரியத்திலும் தங்களை முழுக்க இழந்து பணி புரிகிருர்கள் என்பதைச் சிறப்பாகக் காட்டிச் செல்கிருன் கவிஞன். இத்தகைய 'காதல்' தலைவன் மீதுள்ள ராஜபக்திக்கும் நம்பிக்கைக்கும் உயிர்நிலையாக அமைந்து விடுகிறது.

அங்கதனுடைய மன நிலையிலும், 'ராஜபக்தி' யுடன் ராமன் மீதுள்ள ஒரு வகைக் காதலையும் காணலாம்.

'யார் இனி என்னே(டு)
ஒப்பார்?' என்பதோர்
இன்ப முற்ருன்

என்ற மன நிலையில் காதலின்பத்தையும் கண்டுகொள்ளக் கூடுமல்லவா!

தன் காதலிக்குப் பயன்படக் கூடிய இரகசிய வழியொன்றை எவ்வளவோ கஷ்டப்பட்டு அமைத்துக் கொண்டிருக்கும் காதலன், 'நானு இப் பணி செய்கிறேன்! "பின்னிய கூந்தல் — பேதையின் இள முகம்" தான் என் உள்ளத்திலேயிருந்து இங்கு இப் பணியை இயற்றி வைக்கிறது!' என்று இன்பமுற்றதாக 'மனேன்மணீ'ய நாடகத்தில் காண்கிறோம். அங்கதனுடைய இன்ப நிலையிலும் இத்தகைய காதலுணர்வைக் காணலாமென்று தோன்றுகிறது.

உள்ளம் செலுத்திய உடம்பு


இனி, அங்கதனுடைய மன நிலையும் செயல் — திறனும் எத்தகைய காதல் — வேகத்துடன் — தொண்டாற்றுகின்றன என்பதை அப்படியே படம் பிடித்துக் காட்டும் பாட்டு முழுமையும் ஓதி இன்புறுவோம்:

பார்மிசை வணங்கிச்
சீயம் விண்மிசைப்
படர்வ தேபோல்

வீரன் வெஞ் சிலையிற்
கோத்த அம்பென
விசையிற் போனுன்:

'மாருதி அல்ல
னுகில் நீ எனும்
மாற்றம் பெற்றேன்;

யார்இனி என்னே(டு)
ஒப்பார்?' என்பதோர்
இன்ப முற்ருன்.



ஓதி ஓதிப் பரவசமாகும்போது, அங்கத னுடைய மனப் போக்கையும் அந்த மனம் விரும்பியவாறே விசையுற்றுச் செல்லும் அந்த உடலின் போக்கையும் கூட நம் மனக் கண் முன் தெளிவாகக் கண்டு கொள்வோம்.

விசையுறு பந்தினைப்போல்—
உள்ளம்
வேண்டிய படிசெலும்
உடல் கேட்டேன்

என்று பாரதியார் பிரார்த்திக்கும் சரீர — மனத் தொடர்பினைப் பரிபூரணமாகப் பெற்றிருப்பவன் அங்கதன் என்பதையும் கண்டுகொள்கிறோம்.

இத்தகைய விசையில் செல்லும் அங்க தனுடைய போக்கைக் குறித்து வேறு வருணனையே காணப்பட வில்லை. அனுமன் பாய்ந்து செல்வது எத்தனையோ பாடல்களில் வருணிக்கப்பட்டதல்லவா!

அதிசயமான ஒரு பாட்டு

அங்கதனே ஒரே பாட்டில், ஒரே பாய்ச்சலில் ராவணன் இருப்பிடம் போய் விடுகிறான்;

அயில்கடந்(து) எரிய
நோக்கும் அரக்கரைக்
கடக்க ஆழித்

துயில்கடந்(து) அயோத்தி
வந்தான் சொற்கட
வாத தூதன்,

வெயில்கடந் திலாத
காவல் மேருவின்
மேலும் நீண்ட

எயில்கடந்(து) இலங்கை
எய்தி அரக்கன(து)
இருக்கை புக்கான்.

[அயில் கடந்து எரிய நோக்கும்—வேலாயுதத்தைக் காட்டிலும் உக்கிரமாகவும் நெருப்பெழவும் நோக்க வல்ல. அரக்கரைக் கடக்க — அரக்கரை ஒழிக்க. ஆழித் துயில் கடந்து — பாற்கடலில் துயில் கொள்வதை விட்டு. அயோத்தி வந்தான் சொற்கடவாத — அயோத்தியில் அவதரித்த ராமனது சொல்லை மீறிச் செல்லாத. வெயில் கடந்திலாத காவல் — சூரியன் கடந்து செல்லாத காவலை உடையதும். மேருவின் மேலும் நீண்ட — மேரு மலையைக் காட்டிலும் நீண்டிருப்பதுமான. எயில் கடந்து — மதிலைத் தாண்டி. இருக்கை — இருப்பிடம்.]

அங்கதன் விசையிற் போனானல்லவா! அந்த விசையைத் தொடர்ந்து வெளியிடும் இந்தப் பாட்டின் கம்பீர அமைப்பே அதிசயமாக இருக்கிறது. கவியுலகில் இத்தகைய சிருஷ்டிகளால் மகா கவிகள், 'இவர்களுடைய கவித்வ சக்திக்கு வரம்பே இல்லையோ!' என்று பிரமிக்கத் தக்க தங்கள் மேதையை வெளியிட்ட வண்ணமாயிருக்கிறார்கள்.

இந்தப் பாட்டின் முற்பாதி, அவதார மூர்த்தியாகிய ராமன் பெருமையையும், அவன் சொல்லைக் கடவாத தூதன் பெருமையையும் வற்புறுத்துகிறது. பிற்பாதியோ இலங்காபுரியின் கட்டுக் காவல் நிறைந்த கோட்டை மதிலின் உன்னதத் தோற்றத்தைக் காட்டி, அந்த அரண், படை வலிமை முதலியவற்றை அநாயாசமாகத் தாண்டிப் போய் ராவணனுடைய இருப்பிடத்தையே சேர்ந்து விட்டான் தூதன் என்பதை மணியடித்து முரசு கொட்டி அறிவிப்பது போல் தெரிவிக்கிறது.

ஏன், எப்படி இந்த அநாயாச விஜயம்? அனுமன் தூது சென்ற போது தடைகள் இடையூறுகள் ஏற்பட்டன. லங்கிணியும் எதிர்த்தாள். அனுமன் ராவணன் இருப்பிடம் சென்றதும் இரவில் இரகசியமாக நடந்த நிகழ்ச்சி தானே.

அங்கதனை எதிர்க்கும் முயற்சி ஒன்றும் நடைபெற வில்லையே, 'எதிரிகள் வீரம் விளைப்பரேனும் தீதின்றி மீள வல்லவன் அங்கதன்' என்று ராமன் சொன்னானே, அந்த எதிரிகள் ராவணன் இருப்பிடத்திற்கே அங்கதன் சென்று அவனை நேரில் பார்க்கும் வரை ஒருவகை இடையூறும் விளைக்காமல் இருந்து விட்டதற்குக் காரணம் தான் என்ன?

ஃ ஃ ஃ

கவிஞனுக்குரிய மூலதனமாகிய மனோபாவம், தமிழ்க் கவிகளிலெல்லாம் கம்பனிடம்தான் அதிக அளவில் காணப்படுகிறது என்பதற்கு இந்தக் கட்டமே ஒரு சான்றுதான். இத்தகைய ஒரு கட்டத்தைப் படித்து விட்டு வில்லி பாரதம் போன்ற ஒரு காவியத்தில் எந்தப் பகுதியை வாசித்துப் பார்த்தாலும் உத்தமக் கவிதைக்கும் சாதாரணச் செய்யுளுக்கு முள்ள வேற்றுமை நன்கு புலனாகி விடும். இப்படி ஒப்பிட்டு உண்மை காண்பது நலம்.